ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீஸூக்திமாலா மலர்-24 முதல் பாகம்

ஸ்ரீவசநபூஷண வ்யாக்யாநங்கள்

[மாமுனிகளின் அறுநூறுவது ஆண்டுவிழா நினைவுமலர்]

[மாமுனிகள் அருளிய ஸ்ரீவசநபூ4ஷண (1-22 வாக்ய) வ்யாக்2யாநமும், அதற்குத் திருமழிசை அண்ணா வப்பங்கார் ஸ்வாமி, எம்பார் ஜீயர் ஸ்வாமி, மற்றும் இருவர் இயற்றிய அரும்பதவுரைகளும், ஜநந்யாசார்யர் அருளிய ஸ்ரீவசநபூ4ஷண வ்யாக்2யாநமும் அடங்கியது.]

பதிப்பாசிரியர்கள்:—

ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரத3ாசார்ய ஸ்வாமி,
சென்னை.

ஸ்ரீ உ. வே.
S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி,
('ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்)

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A. B.L.,
அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

விலை ரூ. 6-00. தபாற்கூலி ரூ. 1-00

ஸ்ரீநிவாஸம் அச்சகம், புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத்3 வரவரமுநயே நம:

★ முகவுரை ★

[ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், 'ஸுதர்சனம்' ஆசிரியர்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.]

தே3ஹாத்மாபி4மானிகளுக்கும் ஆத்மஸ்வரூபம் கைவந்திருக்கும் ரிஷிகளுக்கும் பர்வதபரமாணுவோட்டை வாசிபோரும். (ஸ்வயத்ந லப்3த4 ஜ்ஞாநரான) ரிஷிகளுக்கும், (ப4க3வத் ப்ரஸாத3லப்3த4ஜ்ஞாநரான) ஆழ்வார்களுக்கும் அத்தனை வாசிபோரும்; (ப4க3வத3நுப4வபரர்களான) மற்றையாழ்வார்களுக்கும், (மங்க3ளாஶாஸநபரரான) பெரியாழ்வாருக்கும் அத்தனை வாசிபோரும்; (ப4க3வந்நிஷ்ட2ரான) பெரியாழ்வாருக்கும், (ஆசார்யநிஷ்ட2ரான) ஆண்டாளுக்கும், மது4ரகவிகளுக்கும் அத்தனை வாசிபோரும். (விவரணமில்லாவிடில் பல ஐயங்களை விளைக்கும் பிரபந்தங்களையருளிய) ஆழ்வார்களுக்கும், ஐயமறும்படி அவற்றுக்கு விவரணமருளிய ஆசார்யர்களுக்கும் அத்தனை வாசிபோரும். அவர்களிலும் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்களான நாத2முநிகள் தொடக்கமானார்க்கும், க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர்களான எம்பெருமானார் தொடக்கமானார்க்கும் அத்தனை வாசிபோரும். அவர்களிலும், (பின்புள்ளார்க்கும் உதவும்படி) கிரந்தமிடாத ஆசார்யர்களுக்கும், கிரந்தமருளிய ஆசார்யர்களுக்கும் அத்தனை வாசிபோரும். அவர்களிலும் வேதா3ந்த விவரண க்3ரந்த2கர்த்தாக்களான எம்பெருமானார், ஶ்ருதப்ரகாஶிகாப4ட்டர் முதலானார்க்கும், வேதா3ந்த ஸாரமான தி3வ்யப்ரப3ந்த4 ரஹஸ்யத்ரயாதி3 விவரண கர்த்தாக்களான பிள்ளான் நஞ்ஜீயர் பெரியவாச்சான்பிள்ளை முதலானார்க்கும் அத்தனை வாசிபோரும். அவர்களிலும்—விஶ்லேஷத3ஶையில் ஈஶ்வரனையும், பரோபதே3ஶத்தில் ஸம்ஸாரிகளையும் வெறுத்து வார்த்தை சொல்லுதல், இயற்கை வர்ணனை, 'சிவனாய் அயனானாய்' என்பது போன்ற ஸாமாநாதி4கரண்யப் பேச்சுக்கள், "தாழ்சடையும்"

''அரன் நாரணன்'' ''மூவுருவும் கண்டபோது ஒன்றும்சோதி'' ''அரி அயன் அரனென்னுமிவரை ஒன்ற நும்மனத்து வைத்து'' முதலான மந்த3மதிகளுக்கு மயக்கத்தை விளைக்கும் பேச்சுக்கள்முதலான கிலேசங்கள் நிரம்பிய திவ்யப்ரப3ந்த4ங்களுக்கு வியாக்கியானம் செய்வதையே முக்2யக்ருத்யமாகக் கொண்ட பிள்ளான் நஞ்சீயர் முதலானோர்க்கும், தத்வபரமான ரஹஸ்ய க்3ரந்த2ங்களையே இயற்றிய பிள்ளையுலகாசிரியர்க்கும் அத்தனை வாசிபோரும். பொருளுணரவரிய ஸூத்ரம் போன்ற நடையிலமைந்த ரஹஸ்யக்3ரந்த2ங்களையே அருளிய பிள்ளையுலகாசிரியர்க்கும், அவருடைய ஸூத்ரங்களுக்கு விசத3கமமான நடையிலே வியாக்கியானமெழுதுவதையே முக்2யக்ருத்யமாகக்கொண்ட மாமுனிகளுக்கும் அத்தனை வாசிபோரும். இதனாலேயே இவர் ஆசார்யர்களில் சரமாசார்யராய் அமைந்து, ப்ரத2மாசார்யரான பெரிய பெருமாளாலேயே ஆசார்யராக வரிக்கப்பட்டார்.

ஆசார்ய பரம்பரையாகிற ஹாரத்தின் கீழே தொங்கும் ரத்தினப்பதக்கம் போன்றவராய், எம்பெருமானுடைய அபராவதாரமாகக் கீர்த்திபெற்றவராய், பரமஸாத்விகராய், ஜ்ஞான ப4க்தி வைராக்3யாதி3 கு3ணங்களுக்கு ஓர் கடலாயிருப்பவராய், விசத3வாக்சிகா2மணியென்று விருதுபெற்றவராய், ஸ்ரீசைலேசராம் திருவாய்மொழிப்பிள்ளையிடம் சரமபர்வநிஷ்டை2யை உடையவராய், யதீந்த்3ரப்ரவணராய், சரமாசார்யராய், ப்ரத2மாசார்யனுக்கும் ஆசார்யரான நம் கோயில் மணவாள மாமுனிகளின் அறுநூறாவது ஆண்டு விழா நிகழும் ஸாதா4ரண-௵ ஐப்பசித் திருமூலத்தில பா4ரததே3சமெங்கும் சிறப்புறக் கொண்டாடப்படுகிறது.

'' மணவாள மாமுனியே! இன்னுமொரு நூற்றாண்டிரும் '' என்று ஸ்ரீ வைஷ்ணவவுலகம் திருமலை தொடக்கமாகத் திருக்குறுங்குடியளவாகவுள்ள திவ்யதே3சங்கள்தோறும், ஸ்ரீவைஷ்ணவ கிருஹங்கள்தோறும் செய்யும் மங்க3ளாசாஸநபலத்தாலே ஆறுநூறாண்டுகளாக மாமுனிகள் பல

தி3வ்யதே3ஶங்களிலும், குடீகுஞ்ஜங்களிலும் இன்றளவும் அர்ச்சாமூர்த்தியாகவும், ஸ்ரீஸூக்திகளில் புகழுடம்போடும் வாழ்ந்து வருகிறார். மாமுனிகள் அவதரித்த ஸாதா4ரண வருஷம் அறுபது வருடத்துக்கு ஒருமுறை வரும். ஒரு மனிதனுடைய ஆயுளில் அதை ஓரிருமுறைதான் அநுப4விக்கநேரும். அவருடைய நூற்றாண்டு விழாவை அநுப4விக்கும்பேறு, காலவெள்ளத்தில் பிறக்கும் பலகோடி மக்களில் சிலர்க்கே கிடைக்கும். ஸாதா4ரண வருஷத்திலேயே நூற்றாண்டுவிழா நேருவது 300, 600, 900 என்று முந்நூறு வருடங்களுக்கு ஒருமுறையே நிகழும். இதை அநுப4விக்கும் பேறு மிகவும் கிடைத்தற்கரிது. இப்பேறு நமக்கு இப்போது கிடைத்திருக்கிறது.

மாமுனிகளின் தலைசிறந்த க்3ரந்த2மான ஸ்ரீவசநபூ4ஷண வ்யாக்2யாநத்தைப் பல அரும்பத3வுரைகளோடு, பல பரிஷ்காரங்களுடன் அச்சிடுவதாகத் திட்டமிட்டு அறுநூறாவது ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பெற்ற இந்த கிரந்தத்தின் முதல் இருபத்திரண்டு வாக்யங்களடங்கிய ப்ரத2ம ப்ரகரணத்தின் வ்யாக்2யாநாதி3கள் அடங்கிய முதல் பா4க3ம் அறுநூறாவது ஆண்டு நிறைவு விழாவான ஸாதா4ரண ஐப்பசித் திருமூலத்தில் வெளியிடப்படுகிறது. இது சுமார் 400 பக்கங்கள் உள்ளது. கிரந்தம் முழுவதும் முடிய சுமார் மூவாயிரம் பக்கங்கள் வரும். மற்ற பாகங்களும் மாமுனிகளின் பரமகிருபையாலே சில வருடங்களில் நிறைவடையும்.

"புகழ்க் கோலநல் தூக்க" என்கிறபடியே, மாமுனிகளின் மற்ற கிரந்தங்களையெல்லாம் ஒரு தட்டிலும், ஸ்ரீவசநபூ4ஷணவ்யாக்2யாநத்தை ஒரு தட்டிலும் வைத்து நிறுத்தால், ஸ்ரீவசநபூ4ஷண வ்யாக்2யாநமே எடைமிக்கு நிற்கிறது. ஸம்ஸ்க்ருத வேதா3ந்தத்தில் எழும் ஐயங்களை அறுப்பதற்காக வியாஸருடைய ப்3ரஹ்மஸூத்ரம் அவதரித்ததுபோலே, திராவிடவேதா3ந்தத்திலுள்ள ஐயங்களை

அறுப்பதற்காகப் பிள்ளையுலகாசிரியரின் ஸ்ரீவசநபூ₄ஷண ஸூத்ரங்கள் அவதரித்தன. அதற்கு எம்பெருமானாருடைய ஸ்ரீ ப₄ாஷ்யம் அவதரித்ததுபோல் இதற்கு எம்பெருமானாருடைய அபராவதாரமான மாமுனிகளின் ப₄ாஷ்யம் அவதரித்தது. ஸ்ரீ ப₄ாஷ்யத்துக்கு ஸகல ஶாஸ்த்ரவித்தமரான ஸுத₃ர்ஶந ப₄ட்டரின் ஶ்ருதப்ரகாஶிகை டீகையாக அமைந்ததுபோல், மாமுனிகளின் ஸ்ரீவசநபூ₄ஷணப₄ாஷ்யத்திற்கும் சது:ஶாஸ்த்ர வித்தமரான திருமழிசை அண்ணாவப்பங்கார் ஸ்வாமியின் அரும்பதவுரை அமைந்துள்ளது. அதற்குப்பின் தோன்றிய எம்பார் ஜீயர் ஸ்வாமியின் அரும்பதவுரையும் பலவிடங்களில் ஸ்ரீவசநபூ₄ஷணத்தினுடையவும், மாமுனிகளின் ப₄ாஷ்யத்தினுடையவும் பொருளை உணர்த்துவதில் உபகாரகமாயுள்ளது. மணிப்ரவாளநடையிலுள்ள இவ்விரண்டு அரும்பதவுரைகளும், மற்றுமிரு அரும்பதவுரைகளும், மீமாம்ஸா ப₄ாஷ்யமும் நீண்டநாட்களுக்கு முன் தெலுங்கு லிபியில் அச்சிடப்பட்டன. தமிழ் லிபியில் இதுவரையில் அச்சிடப்பட்டதில்லை. இப்போது நாகரம் கலந்த தமிழ் லிபியில் அரும்பதவுரைகளை அச்சிட்டுள்ளோம். ஸ்ரீவசநபூ₄ஷணமீமாம்ஸா ப₄ாஷ்யம் ஸமீபகாலத்தில் ஸ்ரீ காஞ்சீ மஹாவித்₃வான் ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமியால் அச்சிடப்பட்டிருப்பதால் அதை இப்பதிப்பில் சேர்க்கவில்லை. ஸ்ரீவசநபூ₄ஷணத்திற்கு மாமுனிகளின் ப₄ாஷ்யத்திற்கு முன் அவதரித்த ஆய் எனப்படும் ஜநந்யாசார்யருடைய வியாக்கியானமும் நீண்டநாட்களுக்கு முன் தமிழில் அச்சிடப்பட்டிருந்தபோதிலும் இப்போது கிடைப்பதில்லை. ஆகையால், இதையும் சேர்த்து ஸ்ரீவசநபூ₄ஷணத்தை இரு வியாக்கியானங்களோடும், நாலு அரும்பதவுரைகளோடும், பல பரிஷ்காரங்களோடும் அச்சிடும் பணி, வாக₃ம்ருதவர்ஷீ ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரத₃ாசார்ய ஸ்வாமியாலும், அடியேனாலும் சென்ற ஐப்பசியில் திருமூலத்தில் தொடங்கப்பெற்றது; இவ்வருடம் ஐப்பசியில் திருமூலத்தில் முதல்பாகம் நிறைவுபெறுகிறது.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்திலுள்ள மற்ற கிரந்தங்கள் அனைத்தைக் காட்டிலும் ஸ்ரீவசநபூ4ஷணத்திற்கும், அதன் வரவரமுநிபா4ஷ்யத்திற்கும் சிறப்பு உண்டு. "பல பிரபந்தங்கள் அருளிச்செய்த பிள்ளைலோகாசார்யர், ஆசார்ய பரம்பராப்ராப்தமான அர்த்த2ங்களில் அவர்கள் தாங்கள் கௌ3ரவாதிசயத்தாலே ரஹஸ்யமாக உபதே3சித்துப் போந்தவையாய், அருமை பெருமைகளைப்பற்ற இதுக்கு முன்பு தாமும் ப்ரகாசிப்பியாமல் அடக்கிக்கொண்டு போந்தவையுமான அர்த்த2விசேஷங்கள் எல்லாவற்றையும், பின்புள்ளாரும் இழக்கவொண்ணாதென்கிற தம்முடைய க்ருபாதிசயத்துக்குமேலே, பெருமாளும் ஸ்வப்நத்திலே திருவுள்ளமாயருளுகையாலே, ஸ்ரீவசநபூ4ஷணமாகிற இப்ரப3ந்த4முகே2ந வெளியிட்டருளுகிறார்" [பக்கம் 29-32] என்று ஸ்ரீவசநபூ4ஷணவ்யாக்2யாநத்திலும், "அன்னபுகழ் முடும்பை" என்று தொடங்கி (53-59) ஏழு பாசுரங்களில் உபதே3சரத்தின மாலையிலும் ஸ்ரீவசநபூ4ஷணத்தின் சிறப்பை மிகத் தெளிவாகவும், தம் வியாக்கியையின் சிறப்பை ஸூசனையாகவும் மாமுனிகள் தாமே உணர்த்தியருளினார்.

மற்ற ஆசார்யர்களின் கிரந்தங்களில் காணப்படாத பல பல ஆழ்பொருள்கள் இந்த கிரந்தத்தில் உண்டாயினும், அவற்றுக்கெல்லாம் அடிப்படையாய், ஸாரதமமாயிருப்பதொரு ஆழ்பொருள் உண்டு. அதை ஓர் திருஷ்டாந்தத்தின் மூலம் விளக்கினால் அனைவர்க்கும் எளிதில் விளங்கும். அதாவது:— உத்தமனான ஓர் தகப்பனுக்கு நாலு பிள்ளைகள். சிறு வயதிலேயே தறுதலையாகித் தகப்பனோடு சண்டையிட்டு தே3சாந்தரம் சென்றவன் ஒரு பிள்ளை. வீட்டிலேயிருந்தும், தகப்பனை மதிக்காமல் அவன் சொல்லுக்கு மாறாக நடந்துகொண்டு, து3ராசாரமுடையவனாய், பிறர் புகழ் பாடிக்கொண்டிருப்பவன் ஒரு பிள்ளை. தகப்பனை மதித்து அவன் சொல்லுக்கு அடங்கி, நல்ல ஆசாரமுடையவனாயிருந்தும், 'நாம் இப்படி நல்ல பிள்ளையாயிருப்பதால்தான்

தகப்பன் நம்மை ரக்ஷிக்கிறான்' என்று நினைப்பவன் ஒரு பிள்ளை. இப்பிள்ளையிடம் எத்தனையோ நன்மைகள் இருந்த போதிலும், தன்னை இப்படி நல்ல பிள்ளையாம்படி திருத்தியவன் தகப்பனே என்பதையும், உறவை நோக்கியே தகப்பன் எல்லாப்பிள்ளைகளையும் வாசியற ரக்ஷிக்கிறான் என்பதையும், தகப்பனோடு தமக்குள்ள உறவை உணராமையாலும், அவன் செய்யும் ரக்ஷணத்தை விலக்குகையாலுமே முற்கூறிய தன் ஸஹோத$_3$ரர்கள் பூர்ண ரக்ஷணத்தையும் பெறவில்லை என்பதையும் உணராமல், 'தான் நல்லவனாயிருப்பதாலேயே தகப்பன் தன்னை ரக்ஷிக்கிறான்' என்னும் அஹங்கார க$_3$ர்ப்ப$_4$மான எண்ணமாகிற ஓர் பெருங்குறையும் இப்பிள்ளையிடம் உள்ளது. இனி, இவ்வுத்தமனான தகப்பனுக்கு இக்குறையுமில்லாத உத்தமனான பிள்ளையொருவனுண்டு. முந்தியவனிடமுள்ள நலங்களெல்லாம் இவனிடமும் உண்டு. அதற்கும் மேலே, தன்னை இப்படி நல்ல பிள்ளையாம்படி சிறு வயதிலிருந்து திருத்தியவன் தகப்பனே என்பதையும், அவனாலேயே தான் ஓர் வஸ்துவாயிருப்பதையும், அவன் எல்லாப்பிள்ளைகளையுமே ஸமமாகவே ரக்ஷிப்பவன் என்பதையும், தகப்பனுக்கும் தமக்குமுள்ள உறவை உணராமையாலும், அவன் பண்ணும் ரக்ஷணத்தை விலக்குகையாலுமே மற்ற ஸஹோதரர்கள் தகப்பன் செய்யும் ரக்ஷணத்தைப் பரிபூர்ணமாகப் பெறமுடியவில்லையென்பதையும், ஆகையால் தகப்பன் செய்யும் ரக்ஷணத்திற்குத் தன்னிடமுள்ளதெதுவும் காரணமல்லவென்பதையும், தகப்பனே நிரபேக்ஷோபாயபூ$_4$தன் என்பதையும் உணர்ந்த உத்தமன் இவன். இவனே பிள்ளைகள் அனைவரிலும் உத்தமோத்தமன் என்பதை எவரும் மறுக்க இயலாது.

இந்த திருஷ்டாந்தத்தில் கண்ட உத்தமோத்தமனான தந்தையைப் போன்றவன் ஸர்வேஶ்வரன். பா$_3$ஹ்யகுத்$_3$ருஷ்டி மதங்களிலிருப்பவர்கள் தே$_3$ஶாந்தரமோடிய தறுதலைப்பிள்ளையைப் போன்றவர்கள், நாராயணனே

பரமாத்மாவென்றுணர்ந்தும் ப்ரயோஜநாந்தர தே₃வதாந்தர பரர்களாயிருக்குமவர்கள் இரண்டாவது பிள்ளையைப் போன்றவர்கள். பரமபுருஷனே பரமப்ராப்யமென்றுணர்ந்தும் நாம் செய்யும் ப₄க்தி. ப்ரபத்தி முதலானவை அவனைப் பெற உபாயங்கள் என்று நினைப்பவர்கள் மூன்றாவது பிள்ளையைப் போன்றவர்கள். அந்த ப₄க்தி, ப்ரபத்தி முதலானவையும் நாராயணனுடைய க்ருபாஜநங்களேயொழிய க்ருபாஜநகங்களல்ல; அன்றும், இன்றும், என்றும் எல்லாச்சேதனரிடத்தும் கிருபையைக்காட்டி வரும் நாராயணனே நிரபேக்ஷோபாயபூ₄தன். அவனுக்கும் தமக்குமுள்ள உறவை உணராமையாலும், அவன் செய்யும் ரக்ஷணத்தை விலக்குகையாலுமே மற்றவர்கள் அவன் செய்யும் ரக்ஷணத்தைப் பரிபூர்ணமாகப் பெறுமற் போகிறார்கள் என்று உணர்ந்த உத்தமோத்தமர்கள் நாலாவது பிள்ளையைப் போன்றவர்கள். இவர்கள் எம்பெருமானுக்கு மிக நெருங்கியவர்கள். 'யமேவைஷ வ்ருணுதே தேந லப்₄ய:'' ''ப்ரஜாபதிஸ்த்வம் வேத₃, ப்ரஜாபதிம் த்வோ வேத₃, யம் ப்ரஜாபதிர் வேத₃ ஸ புண்யோ ப₄வதி'' [பரமன் ஒருவனைத் தேடி அடைகிறான்; பரமனை ஒருவன் தேடி அடைகிறான்; எவனைப் பரமன் தேடி அடைகிறானோ அவனே மஹாபா₄க்₃யஶாலி] என்று வேத₃த்திலும் புகழப்பட்ட பரக₃தஸ்வீகாரநிஷ்ட₂ர்கள் இவர்களே. ஶ்ருதிஸ்ம்ருதிகளிலும், மற்ற பூர்வாசார்ய க்₃ரந்த₂ங்களிலும் தேடிக்கண்டுபிடிக்கவேண்டியிருக்கும் ஸாரதமமான, ப்ரதா₄நப்ரதிதந்த்ரமான இவ்வர்த்த₂ம் இந்த கிரந்தத்தில் மிகத்தெளிவாக முழங்கப்பட்டுள்ளது. இதுவே ஸ்ரீவைஷ்ணவர்கள் ப்ரமாணமாகக்கொள்ளும் மற்ற எல்லா கிரந்தங்களைக்காட்டிலும் ஸ்ரீவசநபூ₄ஷணத்திற்கும் மாமுனிகள் பா₄ஷ்யத்திற்கும் உள்ளதொரு தனிச்சிறப்பு.

இத்தகைய இந்த கிரந்தத்தை ஸ்ரீவைஷ்ணவர்களாகப் பிறந்தவர்கள் அனைவர்க்கும் காலக்ஷேபம் சொல்லுவதையே வித்₃வான்கள் அனைவரும் தமது முக்₂யக்ருத்யமாகக்கொள்ள வேண்டும்; ஸ்ரீவைஷ்ணவராகப் பிறந்து அதில் பெருமை கொள்ளும் ஒவ்வொருவரும் இந்த கிரந்தத்தைக் காலக்ஷேபம் செய்வதைத் தம் கடமையாகக் கொள்ளவேண்டும்.

இப்படிச் செய்தால்தான் "மணவாளமாமுனியே! இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்று நாம் தினந்தோறும் பிரார்த்திப்பது ப$_2$லபர்யந்தமாகும்.

இத்தகைய மஹாக்$_3$ரந்த$_2$த்தை நாம் தனியே வெளியிடத் துணிவது ஸாஹஸமாகையால், இதைப் பதிப்பிப்பதில் பல மஹநீயர்களைத் துணைகொண்டோம். இந்த க்$_3$ரந்த$_2$த்தைப் பலமுறை காலக்ஷேபம் ஸாதி$_4$த்திருக்கும் ந்யாய வேதா$_3$ந்த வித்$_3$வான் ஸ்ரீ உ. வே. காரப்பங்காடு வேங்கடாசார்யஸ்வாமியின் ப்ரதா$_4$நஶிஷ்யரும், தாமும் இதைப் பலருக்குக் காலக்ஷேபம் ஸாதி$_4$த்துவருபவருமான வாக$_3$ம்ருத வர்ஷீ (சொல்லமுதப் பெருங்கொண்டல்) ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதா$_3$சார்யஸ்வாமி இதைப் பழையபதிப்புக்களிலிருந்து பெயர்த்தெழுதுவது, விஷயஸூசிகை, அநுப$_3$ந்த$_4$ங்கள் முதலானவற்றை ஸித்$_3$த$_4$ப்படுத்துவது முதலிய வகைகளில் பேருதவி புரிந்தருளினார். பாட$_2$ஶோத$_4$நங்கள், புரூப்கள் திருத்துவது முதலானவற்றில் ஸ்ரீஉ.வே. கோழியாலம் ரங்க$_3$நாத$_2$ாசார்யஸ்வாமியும், ஸ்ரீஉ.வே. ஶதாபி$_4$ஷேகம் கோ$_3$விந்த$_3$நரஸிம்ஹாசார்யஸ்வாமியும் மிகவும் உதவியருளினார்கள். பலதிறப்பட்ட தம் காரியங்களிடையே ஸ்ரீகாஞ்சி மஹாவித்$_3$வான் ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசார்யஸ்வாமியும் வாரந்தோறும் புரூப்களைத் திருத்தியும், தம் கருத்துக்களைத் தெரிவித்தும், தம் பத்திரிகையில் அடிக்கடி இதுபற்றிப் புகழ்ந்தெழுதியும் பேருதவி புரிந்தருளினார். கீர்த்தி மூர்த்தியான ஸ்ரீ உ. வே. கோவிந்தாசார்யஸ்வாமியின் திருக்கையால் திருத்தம் பெற்ற ஸ்ரீகோஶமும் சிலவிடங்களில் உதவிபுரிந்தது. இம் மஹநீயர்கள் திறத்தில் அடியேன் தலையல்லால் கைம்மாறிலேனே. இந்த மஹாக்$_3$ரந்த$_2$த்தின் மற்ற பா$_4$க$_3$ங்களும் இவ்வண்ணமே வெளிவரும்படியாக இதில் பங்குகொண்ட அனைவர்க்கும் அரோக$_3$த்$_3$ருட$_4$கா$_3$த்ரத்தையும் எல்லாவித நன்மைகளையும் அளித்தருளவேண்டும் என்று இந்த க்$_3$ரந்த$_2$த்திற்கு ப்ரவர்த்தகரான பெரியபெருமாளையும் அவருக்கும் ஆசார்யரான மணவாளமாமுனிகளையும் பிரார்த்திக்கின்றேன்.

சாதாரண-ஞு ஸ்ரீ வைஷ்ணவ தா$_3$ஸன்.

ஐப்பசியில் திருமூலம். ஸ்ரீ.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்.

பிள்ளைலோகாசார்யர் வைப₄வம்

['ஸுதர்ஶநம்' ஆசிரியர்]

லோகாசார்யாய கு₃ரவே க்₃ருஷ்ணபாத₃ஸ்ய ஸூநவே|
ஸம்ஸார போ₄கி₃ஸந்த₃ஷ்ட ஜீவ ஜீவாதவே நம:||

[ஸ்ரீக்ருஷ்ணர் என்னும் திருநாமமுள்ள வடக்குத்திருவீதிப் பிள்ளையின் குமாரரும், ஆசார்யலக்ஷணபூர்த்தியுள்ளவரும், ஸம்ஸாரப் பாம்பால் கடியுண்ட உயிர்களுக்கு உயிர்தரும் மருந்தாயிருப்பவருமான பிள்ளையுலகாசிரியர்க்கு நமஸ்காரம்]

தமக்கு முந்தி வாழ்ந்த ஆழ்வார்கள் ஆசார்யர்கள் அனைவரும் ஒருதட்டென்றால், தாம் ஒரு தட்டாம்படி புகழ்படைத்தவர் பிள்ளையுலகாசிரியர். அவதாரம் தொடங்கிப் பரமபதமடைந்ததீறாக ஒவ்வோரம்ஶத்திலும் சிறப்புப் பெற்றவர் இப்பேராசிரியர். மாமுனிகளின் உபதே₃ஶரத்தின மாலை, பெரியதிருமுடியடைவு, யதீந்த்₃ரப்ரவண ப்ரப₄ாவம் முதலான நூல்களைத் துணைகொண்டு இவர்தம் பெருமையைச் சுருக்கமாக அநுப₄விப்போம்.

அவதாரவைப₄வம்

கார்த்திகையில் கார்த்திகைநாள் காசினியில் வந்துதித்த கலிசன்றியாம் திருமங்கைமன்னனே, **"கண்ண நின்தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே"** *[பெரிய திருமொழி 7-10-10] என்ற தம் திருவாக்கின்படி, ஸ்ரீஜயந்தியிலேயே அவதரித்த கண்ணனும் பெரியவாச்சான்பிள்ளைக்குக் கவியின் பொருளைக் கற்பிக்கக் கார்த்திகையில் கார்த்திகை நாளிலேயே கலிகன்றியென்னும் திருநாமத்துடன் அவதரித்த பெருமையையுடைய லோகாசார்யராம் நம்பிள்ளை ஒரு நாள் நித்யப்படி காலக்ஷேபம் நிறைவடைந்தவுடன் நடுப்பகலில் ஏகாந்தமாய் எழுந்தருளியிருக்க, திருவடிகளில் ஆஶ்ரயித்த வடக்குத்திருவீதிப்பிள்ளையின் திருத்தாயாரான அம்மி என்பவள், "உம்முடைய சீடனை என்பிள்ளைக்கு ஓர் கல்யாணம் செய்வித்தீரே! அவன் பத்னியோடு வாழமறுக்கிறான்; வம்ஶத்திற்குப் பிள்ளையில்லாமற் போய்விடும்போல் இருக்கிறதே!" என்று பெரு வருத்தத்துடன் விண்ணப்பிக்க, அவளைத் தேற்றி அவனுடைய மனைவிப்பெண்ணை அழைத்துவரச்சொல்லி அவளுடைய திருவயிற்றைத் தம் திருக்கையாலே ஸ்பர்ஶித்து*

'நம்மைப்போல் இருக்கும் ஓரு பிள்ளையைப் பெறக்கடவாய்' என்று அநுக்₃ரஹித்து, வடக்குத் திருவீதிப்பிள்ளையை அழைத்து, ''உம்முடைய விஹிதவிஷய வைராக்₃யத்தை உணர்ந்தோம்; ஆயினும், லோகமர்யாதை₃க்கு நாம் சொன்ன தற்காக இன்றிராக் கூடியிரும்'' என்று நியமிக்க, அப்படியே கூடியிருந்தவளவில் உண்டான க₃ர்ப்ப₄ம் பன்னிரண்டாம் மாதத்தில் பூ₄லோகவைகுண்ட₂மான ஸ்ரீரங்கத்தில் ஐப்பசியில் திருவோணத்தில் ஆண் குழந்தையாகப் பிறக்க, அவருக்கு ''லோகாசார்யர் பிள்ளை'' என்று நம்பிள்ளையுடைய திருநாமத்தையே சாத்தி, திருத்தமப்பனாரான வடக்குத்திருவீதிப்பிள்ளையால் ஸகலார்த்த₂ங்களையும் அளித்து வளர்க்கப்பட்டவர் பிள்ளையுலகாசிரியர். இவர் திருத்தாயார் திருநாமம் ஸ்ரீரங்கநாச்சியார். இவர் கச்சிநகர் எழுந்தருளும் பேரருளாளனும் வரத₃னின் அம்ஶாவதாரமே என்பதை மாமுனிகள் தாமே ஓர் ஐதிஹ்யத்தின்மூலம் ஸ்ரீவசநபூ₄ஷணவ்யாக்₂யாநத்திலே (பக்கம் 33-36) நிலைநாட்டியருளினர்.

பிள்ளைலோகாசார்யருடைய அப்₃த₃பூர்த்திக்கு நம்பெருமாளை ஸேவிப்பதற்காகக் குழந்தையைப் பல்லக்கில் எழுந்தருளுவித்து நம்பிள்ளை முதலான பெரியவர்களனைவரும் கோயிலுக்குச் சென்று மங்க₃ளாஶாஸனம் செய்ய, பெருமாளும் நம்பிள்ளையை அர்ச்சகமுக₂மாக, ''உம்மைப்போல் ஒரு பிள்ளையை அருளினீரே; இனி, நம்மைப்போல் ஒரு பிள்ளையை அருளும்'' என்று நியமிக்க, நம்பிள்ளையும் அதை அங்கீ₃கரிக்க, அவ்வநுக்₃ரஹத்தாலே பிள்ளையுலகாசிரியர்க்குத் திருத்தம்பியார் அவதரித்தருளினர். அழகியமணவாளனின் பிள்ளை என்பது தோற்ற அழகிய மணவாளப்பெருமாள் நாயனர் என்று அவருக்குத் திருநாமம் சாத்தி, ராமலக்ஷ்மணர்களைப்போலும், ப₃லராம க்ருஷ்ணர்களைப்போலும் அவர்களை வளர்த்து வந்தனர். இது பிள்ளைலோகாசார்யரின் அவதாரப் பெருமை.

நிஷ்ட₂ாவைப₄வம்

திருத்தகப்பனரைப்போலே பரமவிரக்தரான இப்பிள்ளைகளிருவரும், வைராக்₃யப₄ங்க₃ம் ஏற்படலாகாது

என்னும் திருவுள்ளத்தாலே நைஷ்டி2கப்3ரஹ்மசாரிகளாகவே இறுதிவரையில் வாழ்ந்து வந்தனர். இப்பெருமையாலேயே, க்3ருஹஸ்த2ர்களாயிருந்த மற்ற ஆசார்யர்கள் ப்ரபந்நனுக்கு விஹிதவிஷயநிவ்ருத்தி தன்னேற்றம் (சிறப்பு) என்று சொல்லத்துணியாதபோது, பிள்ளையுலகாசிரியர் ஸ்ரீவசந பூ4ஷணத்திலே இவ்வரும்பொருளை ஸூத்ரமிட்டருளினர்.

க்3ரந்த2வைப4வம்

மற்ற ஆசார்யர்கள் வேதா3ந்த விவரணக்3ரந்த2ங்களும், வேதா3ந்த சா2யையில் அமைந்த த்ராவிடவேதா3ந்த விவரணக்3ரந்த2ங்களும் அருளுவதையே முக்2யக்ருத்யமாகக் கொண்டிருந்தனராகையால், ஸாரதமமான அர்த்த2ங்கள் அவர்களுடைய கிரந்தங்களிலே தேடிக்கண்டுபிடிக்கவேண்டும்படியிருக்கும். அப்படியல்லாமல், ஸாரதமமான ரஹஸ்ய த்ரய விவரணம், தத்வத்ரயவிவரணம் முதலிய ரஹஸ்ய க்3ரந்த2ங்களை இயற்றுவதையே போதுபோக்காகக்கொண்டிருந்தவராகையாலே, சாடூக்தி, ரஸோக்தி, அலங்காரோக்தி முதலான எதுவும் கலசாமல், ஒவ்வொரு பத3மும் தத்வநிர்ணயபரமாகவேயிருக்கும் கிரந்தங்களையே அருளிய பெருமை பிள்ளையுலகாசிரியர் ஒருவர்க்கே உரியதாகும். இவருடைய க்3ரந்த2ங்கள் அஷ்டாத3ச ரஹஸ்யங்கள் என்று பெயர்பெற்று ஸ்ரீவைஷ்ணவவுலகை உய்வித்து வருகின்றன. மாமுனிகளின் வியாக்கியானங்களிலிருந்து தனிச்லோகம் முதலான மற்றும் சில கிரந்தங்கள் இவர் அருளியதாகத் தெரியவந்தாலும், அவை இப்போது கிடைப்பதில்லை. இவருடைய கிரந்தங்கள் அனைத்திலும் சிறப்புப்பெற்றதாய் மற்ற கிரந்தங்களிலில்லாத பல பரமரஹஸ்யார்த்த2ங்களை அறிவிப்பதாய், பெரியபெருமாளுடைய நியமனத்தால் அவதரித்ததாய், அவரால் அங்கீகரிக்கப்பட்டதான ஸ்ரீவசந பூ4ஷணம் ஒன்றுக்கே இரு பூர்வாசார்ய வ்யாக்2யாநங்கள் அமைந்தன. அதிலும், மாமுனிகளின் வியாக்கியானம் அத்யாச்சர்யமான பல அரும்பதவுரைகளோடும் மீமாம்ஸா பா4ஷ்யத்தோடும் பொலிகின்றது. இந்த க்3ரந்த2த்தைப் பற்றிச் சிலர் ஆக்ஷேபிக்க, இதில் அருளப்பட்ட அர்த்த2ங்

களை நிலைநிறுத்துவதற்காகவே அழகிய மணவாளன் திருமுன்பே, இவர் திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனாராலே ஆசார்யஹ்ருதயம் என்னும் அத்புதக்ரந்தம் அருளிச்செய்யப்பெற்று நம்பெருமாளின் அங்கீகாரத்தையும் அநுக்ரஹத்தையும் இந்த திவ்யக்ரந்தம் அடைந்தது. மாமுனிகளருளிய உபதேசரத்தின மாலையில் பற்பல அரிய பாசுரங்களைப் பெற்ற பெருமை இவ்வொரு திவ்யக்ரந்தத்திற்கே உண்டு. இது இவருடைய க்ரந்த வைபவம்.

குணவைபவம்

குணமென்னும் குன்றேறி நின்றவர் இவ்வாசிரியர் ஒருவரே. அஜாதசத்ருவாய் விளங்கிய பரமஸாத்விகர் இப்பெரியார். தம் ஸம்பந்தம் பெற்ற திர்யக்குகளுக்கும் மோக்ஷமளித்த பெருமை இப்பேராசிரியர்க்கு உண்டு. திருவரங்கம் துருஷ்கர்களால் ஆக்ரமிக்கப்பட்டபோது, பெரியபெருமாளுக்குத் திருமுன்பே கல்காப்புச்சாத்தி, நம்பெருமாளை எழுந்தருளுவித்துச் சென்று ரக்ஷித்த பெருமை இவர் சிறப்புக்களில் தலையானது. அப்படி ரக்ஷிக்கும் காலத்திலேயே (ஜ்யோதிஷ்குடி என்னும் கிராமத்திலே) திருநாட்டுக்கு எழுந்தருளி, தம்முடைய ஸர்வத்தையும் நம்பெருமாளுக்காகப் பரித்யாகம் செய்த பெருமை இப்பெரியார் ஒருவருக்கே உண்டு.

சிஷ்யப்பெருமை

திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார், கூரகுலோத்தமதாஸர், (மாமுனிகளின் ஆசார்யரான) திருவாய்மொழிப்பிள்ளை, விளாஞ்சோலைப்பிள்ளை, மணற்பாக்கத்து (திருச்சானூர்) நம்பியார், (மாமுனிகளின் பூர்வாஶ்ரம திருத்தமப்பனாரான) திகழக்கிடந்தாரண்ணன் முதலான பல பல பெருமக்களை சிஷ்யராகப் படைத்திருந்த பெருமையும் இப்பெரியார்க்கு உண்டு.

இப்படிப் பலபல பெருமைகளை உடைய இப்பேராசியருடைய திவ்யக்ரந்தங்களைக்கற்று உலகம் உய்வதாக.

ஜநந்யாசார்யர் வைப₄வம்

['ஸுத₃ர்ஶனம்' ஆசிரியர்]

ஆசார்யஹ்ருத₃யஸ்யார்த்த₂ா: ஸகலா யேந த₃ர்ஶிதா: |
ஸ்ரீஶாநுத₃ாஸமமலம் தே₃வராஜம் தமாஶ்ரயே ||

[ஆசார்ய ஹ்ருத₃யத்தின் அர்த்தங்கள் அனைத்தையும் அருளியவராய், ஸ்ரீஶாநுத₃ாஸர், தே₃வராஜர் என்னும் திருநாமங்களை உடையவரான திருநாராயணபுரத்தாயை ஆஶ்ரயிக்கிறேன்.]

நம்பிள்ளையின் சிஷ்யர்களில் ஒருவராய், அவரிடமிருந்து திருவாய்மொழியீட்டைப் பெற்றவர் ஈயுண்ணிமாத₄வர். இவருடைய சிஷ்ய பரம்பரையிலேயே ஈடு ஓராண் வழியாய், உபதேசிக்கப் பெற்று வந்தது. இவருடைய குமாரர் (சிஷ்யர்) ஈயுண்ணி பத்₃மநாப₄ர். இவருடைய சிஷ்யர் நாலூர்ப்பிள்ளையென்னும் ஸுமந: கோலேஶர், இவருடைய குமாரர் (சிஷ்யர்) தே₃வராஜர் என்னும் நாலூராச்சான்பிள்ளை. இவருடைய சிஷ்யர்களில் முக்கியமானவர் திருநாராயணபுரத்தாய் என்னும் ஜநந்யாசார்யர். ப₄க₃வத்₃ப₄ாக₃வதர்களுக்குத் தாய்போலே பரிவுகாட்டி வந்தமையாலே 'ஆய்' என்றும், 'ஜநநீ' என்றும் சிறப்புப் பெயர் பெற்றவர் இப்பெரியார். தே₃வராஜர் என்பது இவருடைய இயற்பெயர். திருநாராயணபுரத்தில் அவதரித்தவராகையாலே 'திருநாராயணபுரத்து ஆய்' என்று அழைக்கப்படுவர். இவர் அருளிய ஸ்ரீவசநபூ₄ஷண வ்யாக்₂யாநம் ஸ்ரீஸூக்திமாலா மலர் 24ல் சேர்த்து அச்சிடப்படுகிறது. இவர் அருளிய திருப்பாவை வ்யாக்₂யாநமான நாலாயிரப்படியும் அச்சிடப்பட்டுள்ளது. திருமாலைக்கும் ஆசார்யஹ்ருத₃யத்திற்கும் இவர் வியாக்கியானமிட்டருளியுள்ளதாகப் பெரிய திருமுடியடைவு கூறும், அவை இப்போது கிடைப்பதில்லை. மாமுனிகளுக்கும் இவருக்குமுள்ள ஸம்ப₃ந்த₄ம் யதீந்த்₃ரப்ரவண ப்ரப₄ாவத்தில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது:—

(மாமுனிகள்) ஆசார்யஹ்ருத₃யத்திற்குப் பொருள் அருளிச்செய்யும்போது "ஜ்ஞாநசதுர்த்தி₂களின் மேலேயிறே ஆநந்த₃ஷஷ்டி₂க்குத₃யம்" என்கிற வாக்கியத்திற்கு அர்த்த₂ம் ஸ்வரஸமாக ஆகாமையாலே, இதற்கு அர்த்த₂மருளிச் செய்வாராரென்று விசாரமுண்டாய், திருநாராயணபுரத்தாயி பக்கலிலே இவ்வர்த்த₂ம் கேட்கவேணும் என்னும்

பேராசையோடே ஆழ்வார்க்கு விண்ணப்பஞ் செய்து அவரநுமதிகொண்டு திருநாராயணபுரத்துக்குப் போவோமென்று புறப்பட்டெழுந்தருளா நிற்க, ஆயியும் ஜீயருடைய ப்ரப₄ாவங்கேட்டு இவரை ஸேவிப்பதாகத் திருநகரிக்கு ஆஸந்நமாக மார்க்க₃மத்₄யே வந்து ஸங்க₃தராக அவரைக் கண்டு, "எண்ணின ப₂லம் எதிரிலே வரப்பெறுவதே!" என்று பெரிய ப்ரீதியோடே தீ₃ர்க்க₄ப்ரணமம் பண்ணி நிற்க, ஆயியும் தாளுந் தடக்கையுங் கூப்பி ஸேவிக்க, இருவரும் அந்யோந்யம் வந்த₃நபரராய் குஶலப்ரஶ்நம் பண்ணிநிற்க, இத்தைக்கண்டு ஜீயர் ஸ்ரீபாத₃த்து முதலிகளெல்லாரும் "பெரிய நம்பியும் எம்பெருமானாரும் எதிர்ப்பட்டாப்போலாயிற்று" என்று மிகவும் உகந்தருளினார்கள். அநந்தரம் குன்றமாடத்திருக்குருகூரேற எழுந்தருளி, ஆயி பக்கலிலே ஆசார்யஹ்ருத₃யரஹஸ்யார்த்த₂ங்களையெல்லாம் கேட்டருளி, (ஆசார்யஹ்ருத₃யஸ்யார்த்த₂ாஸ் ஸகலா யேந த₃ர்ஶிதா:| ஸ்ரீஶாநுத₃ாஸமமலம் தே₃வராஜம் தமாஶ்ரயே||) என்று அந்த உபகாரஸ்ம்ருதிக்கு அவர் விஷயமாக ஒரு தனியனருளிச் செய்தருள; ஆயி தமக்கு அதில் அந்வயமற்றபடி தோற்ற

> பூதூரில் வந்துதித்த புண்ணியனோ? பூங்கமழும்
> தாதாரு மகிழ்மார்பன் றானிவனோ?—தூதூர
> வந்தநெடுமாலோ? மணவாளமாமுனிவன்
> எந்தை யிவர்மூவரிலும் யார்?

என்றருளிச்செய்து, ஜீயரை அவதார விஶேஷமென்றுதரித்துக்கொண்டு, ஆழ்வாரையும் அநுதி₃நம் ஸேவித்துக்கொண்டு அங்கே சிலகாலமெழுந்தருளியிருக்க;

அதுவே ஹேதுவாக 'ஆயி திருநாட்டுக்கெழுந்தருளினார்' என்று திருநாராயணபுரத்திலுள்ள அஸூயாளுக்கள் திருமாளிகையிலுள்ள ஸர்வஸ்வத்தையும் செல்வப்பிள்ளை அங்கீ₃கரித்தருளும்படி ஸ்ரீப₄ண்டா₃ரத்தில் சேர்க்க, அக்காலத்திலே ஆயியும் மீண்டு திருநாராயணபுரத்துக்கெழுந்

தருளி இச்செய்தியைக்கேட்டு ஹ்ருஷ்டராய் "யஸ்யாநுக்₃ரஹமிச்சா₂மி தஸ்ய வித்தம் ஹராம்யஹம்" [எவனுக்கு நான் அருள்புரிய விரும்புகிறேனோ, அவனுடைய செல்வத்தை எடுத்துக்கொள்கிறேன்.] என்னும் திருமுகப்படியே ப்ரத்யக்ஷமாகச் செல்வப்பிள்ளை இத்தைக் கைக்கொண்டருளியபின்பு நாம் இனி இரக்கத்துக்கு விஷயமென்கிறது கிபுநர்ந்யாயஸித்₃த₄மிறே. 'யஸ்யைதே தஸ்ய தத்₃த₄நம்' [மனைவி, புத்திரன், அடிமை ஆகியவர்களுடைய செல்வம் அவர்களுடைய யஜமானனுக்கே உரியது.] அன்றோ? என்று ஈடுபட்டு, ஆநந்த₃ாஸ்ருக்கள் பனிப்ப எழுந்தருளி, ஆசார்யக்ருபாலப்₃த₄ரான ஞானப்பிரானொருவரையுமே அர்த்தி₂த்துப்பெற்று மற்றவைகளையெல்லாம் அங்குத்தைக்கு ஸமர்ப்பித்து, யாத₃வகி₃ரிநிலயனுக்கு மால்யஸமர்ப்பணைகநிஷ்ட₂ராய், அங்கே ப்ரீதராயெழுந்தருளியிருந்தார்.

மாதவத்தோர்வாழ்த்தும் முடும்பை மணவாளன்
தோதவத்தித் தூய்மறையோரான பெற்றார்—தீதற்ற
ஆசாரியவிதயம்பெற்றார் நம்மாயியிவர்
தேசாரத் தன் கண் நெஞ்சே காண்

என்று ஆசார்யஹ்ருதய ஸம்ப்ரதா₃யத்தைத் தாம் (மாமுனிகள்) அநுஸந்தி₄த்தருள, அப்படியே முதலிகளும்,

மாதவத்தோன் மாறன் மறை கூறும் மணவாளன்
தோதவத்தித் தூய் மறையோரான பெற்றார்—
நீதியினால்
ஆங்கவர்தாள்சேரப் பெற்றார் ஆய் மணவாளன்
பூங்கமலத்தாள்கள் நெஞ்சே போற்று

என்றநுஸந்தி₄த்தார்கள்.

இத்தகைய மஹாசார்யரின் ஸ்ரீவசநபூ₄ஷண வ்யாக்₂யாநத்தை நாம் அநுஸந்தி₄த்து உய்வோமாக.

—※—

மணவாளமாமுனிகள் வைபவம்

[ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி]

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதா₃யத்தில் பல ஆசாரியர்கள் விளங்கினாலும், மூவர் முக்கியமாகக்கொள்ளப்பட்டுள்ளார்கள். அவர்கள் நம்மாழ்வாரும், நம்பிராமாசனும், நம்மணவாள மாமுனிகளும் ஆவர். “ஆழ்வார் திருவடிகளே ஶரணம். எம்பெருமானார் திருவடிகளே ஶரணம். ஜீயர் திருவடிகளே ஶரணம்” என்று ஸ்ரீவைஷ்ணவவுலகம் இவர்களை நிச்சலும் அநுஸந்தா₄நம் செய்து வருகிறது. இவர்களுள், நம்மாழ்வாருடைய பெருமையிற் காட்டிலும் ஸ்ரீ ராமாநுஜருடைய பெருமை மிக்கது; இவ்விருவர் பெருமையினும் மணவாள மாமுனிகளின் மேன்மை மிக்கது; ஒப்புயுர்வற்றது என்றபடி. ஆசாரிய பதவியை அலங்கரிப்பதற்கு ஏற்ற நற்குணங்கள் அனைத்தும் மாமுனிகள் திறத்தே குடிகொண்டிருந்தன என்றால் இஃது இறையும் அதிஶய யோக்தியாகாது. இவர் திருவவதரித்தது ஆழ்வார்திருநகரியில். இவரது திருத்தந்தையாரின் திருநாமம் திகழக்கிடந்தான் திருநாவீறுடைய பிரான் தா₃ஸர் அண்ணர். கலியுகா₃தி₃ நாலாயிரத்து நானூற்று எழுபத்திரண்டாவதான ஸாதா₄ரண வருடத்தில் ஐப்பசித் திங்களில், திருமூல நன்னாளில் ஆதி₃ஶேஷனுடைய அம்ஶமாகவும், ஸ்ரீராமாநுஜருடைய அபராவதாரமாகவும் தோன்றினார். இங்ஙனே உலகுக்கெல்லாம் ஓர் உயிராகத் தோன்றிய தி₃வ்யமூர்த்திக்கு ஸ்ரீரங்க₂நாத₃னுடைய திருநாமத்தைச் சாத்த விரும்பிய பெரியோர் “அழகிய மணவாளன்” எனப் பெயரிட்டனர். “அழகிய மணவாள நாயனார்” எனச் சிறப்புத் திருநாமமாக வழங்கி வந்தது.

ஸ்ரீ வைஷ்ணவ ஆசாரிய பரம்பரையில் பிள்ளை லோகாசாரியர் என்பவர் ஓர் மஹாசாரியர். இவர் ரஹஸ்யார்த்த₂ங்களைப் பதினெட்டு நூல்கள் மூலமாய் வெளியிட்டருளிய பெருவள்ளல். அவருடைய திருவடிகளிலும், அவருடைய சீடரான கூரகுலோத்தமதா₃ஸர்

திருவடிகளிலும் சிரகாலம் பணிந்திருந்து அரிய பெரிய அர்த்த$_2$விசேஷங்களை நன்கு உணர்ந்தவரும். ஆழ்வார்களின் ஈரச்சொற்களிலே ஈடுபாடு காரணமாக "திருவாய்மொழிப் பிள்ளை" என்று சிறப்புத் திருநாமம் பெற்றவருமான "திருமலை ஆழ்வார்" (ஸ்ரீசைலேசர்) என்கிற ஆசாரியரை அடிபணிந்து ஸத்ஸம்ப்ரதா$_3$ய அர்த்த$_2$ங்களைப் பெற்றார் நம் மாமுனிகள். நம் பூர்வாசாரியர்கள் அனைவரும் திருவரங்கம் பெரியகோயிலிலே எழுந்தருளியிருந்து த$_3$ர்ஶந நிர்வாஹம் செய்துவந்தனராதலால் மாமுனிகளும் திருவரங்கம் திருப்பதியிலே வந்து சேர்ந்து, அங்கு ஸ்ரீரங்கநாத$_2$னாலும் ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களாலும் ப$_3$ஹுமாநிக்கப் பெற்று, ஶிஷ்யர்களுக்கு ஸம்ப்ரதா$_3$ய அர்த்த$_2$ங்களை அருளிச்செய்துகொண்டு வாழ்ந்து வந்தார். இல்லற வாழ்கையைத் துறந்து துறவறம் பூண்டு "மணவாள மாமுனிகள்" என்கிற திருநாமத்துடன் விளங்காநின்றார். வானமாமலையிலே மஹாஜ்ஞாந நிதி$_4$யாக எழுந்தருளியிருந்த "அழகிய வரதர்" என்பவர் பரமவிரக்தியாலே துறவறம் பூண்டு "ஸ்ரீராமாநுஜ ஜீயர்" என்று திருநாமம் பெற்றிருந்தார். அவர் நம் மாமுனிகள் திருவடியில் ஆஶ்ரயித்தார். அவரே மாமுனிகளின் தலைவரான ஶிஷ்யர். மாமுனிகளின் ஶிஷ்யர்களில் எண்மர் தலைமை பெற்று அஷ்டதி$_3$க்$_3$க$_3$ஜங்கள் என்கிற சிறப்புப் பெயரும் பெற்று உலகம் போற்ற நின்றார்கள். அவர்களது திருநாமங்கள் (1) வானமாமலை ஜீயர், (2) பட்டர்பிரான் ஜீயர். (3) திருவேங்கட ராமாநுஜ ஜீயர், (4) கோயில் அண்ணன், (5) ப்ரதிவாதி$_3$ ப$_4$யங்கரம் அண்ணன், (6) எறும்பியப்பா, (7) அப்பிள்ளை, (8) அப்பிள்ளார். இவர்கள் தவிர நவரத்னங்களான ஶிஷ்யர்களும் உண்டு. சேனை முதலியாண்டான் நாயனார், சடகோபதாஸரான நாலூர்சிற்றுத்தான், கந்தாடைபோரேற்றுநாயன், ஏட்டூர் சிங்கராசார்யர், கந்தாடை அண்ணப்பன், கந்தாடை திருக்கோபுரத்து நாயனார், கந்தாடை நாரணப்பை, கந்தாடை தோழப்பரப்பை, கந்தாடை அழைத்து வாழ்வித்த பெருமாள் ஆகிய இவர்கள் நவரத்னங்கள். மாமுனிகளின்

பூர்வாஶ்ரமத் திருக்குமாரர் ராமாநுஜாசார்யர், திருப்பேரர் ஜீயர் நாயனார் என்று ப்ரஸித்3த4ரான அழகிய மணவாள நாயனார்.

கோயில் கந்தாடையண்ணன் (உடையவருக்கு முதலி யாண்டானைப்போலே) இவருக்குப் பாது3காஸ்த2ாநீயரா யிருப்பர். எறும்பியிலப்பா (வடுகநம்பியைப்போலே) தேவு மற்றறியாதே அத்யந்தாபி4மதராயிருப்பர். ப்ரதிவாதி3ப4யங் கரமண்ணா (ஆழ்வானைப்போலே) உசாத்துணையாயிருப்பர். அப்பிள்ளார் (உறங்காவில்லிபோலே) மட2த்தில் ஸர்வப4ரங் களையும் நடத்திக்கொண்டு போருவர். வானமாமலை ஜீயர் (அருளாளப்பெருமாள் எம்பெருமானார்போலே) ஆஶ்ர யித்தவன்று தொடங்கிப் பிரியாதாட்செய்திருப்பர். ப4ட்டர் ஜீயர் பூர்வாஶ்ரமத்திலே கோவிந்ததாஸரப்பனென்று திரு நாமத்தையுடையராய் முப்பது வருஷம் பிரியாதே இருந்து மஹாவிரக்தராய் ஜீயரான பின்பும் பிரிவில் தரியாமை முன்னிட்டு அடிமை செய்கையாலே எம்பாரைப்போலே பாத3ச்ச2ாயாபந்நராயிருப்பர். ஜீயர் நாயனார், திருக்குருகைப் பிரான் பிள்ளானைப்போலே அத்4யாத3ரணீயராயிருப்பர்.

ஶ்ரீமாந் ஸௌந்த3ரஜாமாத்ருமுநி: பர்யாய ப4ாஷ்யக்ருத் |
ப4ாஷ்யம் வ்யாகுர்வதஸ் தஸ்ய ஶ்ரோத்ருகோடௌ மமாந்வய:||

என்கிறபடியே எம்பெருமானாருடைய புநரவதாரமான பெரியஜீயர் பூ4ப்ரத3க்ஷிணம்பண்ணி அநேக ஸ்த2லங்கள் ஜீர்ணோத்3த4ாரணம் பண்ணியருளினார். திருநகரியில் திரு வாய்மொழிப்பிள்ளைக்குத் தம்முடைய நிஜ ஸ்வரூபமான ஶேஷாவதாரத்தைக் காட்டினார். பரமத நிரஸந ஸ்வமத ஸ்த2ாபனம் பண்ணினார். ஸர்ப்பாதி3ஸ்த2ாவரஜங்க3மாதி3 களுக்கு மோக்ஷம் ஸாதி4த்தருளினார். வடமதுரையில் ஜீர்ணோத்3த4ாரணம் பண்ணினார்.

மாமுனிகளுக்கு அமைந்துள்ள பெருமைகளில் தலை யான பெருமை ஶ்ரீரங்க3நாத2னுக்கும் காலக்ஷேபம் ஸாதி4த்த பெருமை. அப்பெருமான் மாமுனிகளிடத்தே திருவாய்மொழிப் பொருள்கேட்க விரும்பி, ஒரு நாள் இவருக்கு அருளப்பாடு இட்டு, "ஜீயரே! நாளை முதலாக நம்முடைய பெரியதிருமண்ட பத்திலே இருந்து நம்மாழ்வாருடைய திருவாய்மொழியை ஈடு முப்பத்தாறுயிரப்படி முதலான வ்யாக்2யாநங்களுடனே

ப்ரவசனம் செய்வீர்"— என்று நியமிக்க, மாமுனிகளும் அணியரங்கன் திருமுற்றத்து அடியார் தங்கள் இன்பமிகு பெருங்குழுவோடுங்கூடப் பேரோலோக்கமாக எழுந்தருளி யிருந்து ஈடு தொடக்கமான ஐந்து வ்யாக்₂யாநங்களுடனே திருவாய்மொழியை அவ்வவ்விடங்களிலே, "இது ஶ்ருதி ப்ரக்ரியை, இது ஸ்ரீப₄ாஷ்ய ப்ரக்ரியை, இது ஶ்ருத ப்ரகாஶிகா ப்ரக்ரியை, இது கீத₃ாப₄ாஷ்ய ப்ரக்ரியை, இது ஸ்ரீபாஞ்சராத்ர ப்ரக்ரியை, இது ஸ்ரீராமாயண ப்ரக்ரியை, இது மஹாப₄ாரத ப்ரக்ரியை, இது ஸ்ரீவிஷ்ணு புராண ப்ரக்ரியை, இது மஹாப₄ாக₃வத ப்ரக்ரியை, இது பத₃ார்த்த₂ம், இது வாக்யார்த்த₂ம், இது மஹாவாக்யார்த்த₂ம், இது வ்யங்க்₃யார்த்த₂ம்" என்று அற்புதமாய், "விஶத₃வாக்ஶிக₂ாமணி" என்கிற தமது விருது நிறம் பெறவும், 'ஸர்வஜ்ஞஸார்வபௌ₄ளமர்" என்கிற பட்டம்பொலியவும் ப்ரவசனமசெய்து வந்தார். பெருமாளும் நாச்சிமாருடனே சீரிய சிங்காசனத்து எழுந்தருளியிருந்து ஒரு ஸம்வத்ஸரம் அளவும் திருச்செவி சாத்தியருளினார். காலக்ஷேபம் முடிவு பெறும் நாளில், அப்பெருமான் நாலைந்து பிராயம் வாய்ந்த அர்ச்சக குமாரனைக் கோலம் பூண்டு, கோ₃ஷ்டி₂யின் இடையே வந்து, கைகூப்பிநின்று, "ஸ்ரீஶைலேஶ த₃யா பாத்ரம்" என்று தொடங்கி, முப்பத்திரண்டு எழுத்துத் திருமந்திரமாகிய தனியனை விண்ணப்பம்செய்து மறைந்தான். இவ்வதிஶயத்தை நோக்கி அனைவரும் வியந்தனர். இத்தனியனைப் பட்டோலைகொண்டு மஞ்சள் காப்பு சாத்தி ஸ்ரீரங்க₃நாத₂ன் திருவடிவாரத்தில் ஸமர்ப்பித்து எடுத்து, தட்டிலே வைத்துச் சிறப்பாகக் கொண்டாடினார்கள். "வடமொழி வேத₃த்திற்கு ஓங்காரம்போலே தென்மொழி வேத₃த்திற்கு இத்தனியனே முதலும் முடிவுமாகக் கடவது" என்று பெருமாளுடைய நியமநமும் பாங்காக வாய்த்தது.

பிள்ளை உலகாரியர் அருளிச்செய்த பதினெட்டு ரஹஸ்யங்களுள் ஸ்ரீவசனபூ₄ஷணம் தத்வத்ரயம், முமுக்ஷுப்படி என்கிற மூன்று ரஹஸ்யங்களுக்கும் மாமுனிகள் அத்யாஶ்சர்யமான வ்யாக்₂யாநம் இட்டருளினார்.

பிள்ளைலோகாசாரியர் திருத்தம்பியரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச்செய்த "ஆசார்ய ஹ்ருதயம்" என்னும் ரஹஸ்ய ரத்தினத்திற்கும் மாமுனிகள்—தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகிய வியாக்கியானம் இட்டு அருளினார். பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளை யிடம் தமக்குள்ள ப்ரதிபத்தி தோற்றும்படியாக, நாலாயிர திவ்யப்ரபந்தங்களில அவருடைய உரை கிடைக்கத் தக்கதாயிருந்த எந்தப் பிரபந்தத்திற்கும் தாம் உரை யிடாமல், பெரியாழ்வார் திருமொழியில் அவருடைய வியாக்கியானம் லோபமடைந்த பகுதிக்கு மாத்திரமும், அவரால் உரையிடப்படாத ராமாநுஜ நூற்றந்தாதிக்கும் உரை யிட்டு அருளினார். திருவாய்மொழி நூற்றந்தாதி உபதேச ரத்தினமாலை, ஆர்த்திப்பிரபந்தம், யதிராஜவிம்சதி, தேவ ராஜமங்களம் என்கிற பத்ய நூல்களையும் அருளிச்செய்தார். நம்மாழ்வார் தம்முடைய பெருமையை "துவளில் மாமணி மாடம்" என்கிற திருவாய்மொழியில் தாமே வெளியிட்டுக் கொண்டவாறுபோலே, மாமுனிகளும் தாமே தம்முடைய பெருமைகளை ஆர்த்திப்பிரபந்தத்தில்,

"தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்றோம்
தேவனுறை திருப்பதியே யிருப்பாகப் பெற்றோம்
மன்னியசீர் மாறன்கலை யுணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்
முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்
முழுது நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்
பின்னையொன்று தனில் நெஞ்சு பேராமற் பெற்றோம்
பிறர்மினுக்கம் பொறாமையிலாப் பெருமையும் பெற்றோமே"

என்று வெளியிட்டருளுகிறார். இப்பாசுரமே நமக்கு நித்தியானுஸந்தேயம்.

அடியார்கள் வாழ அரங்க நகர் வாழ
சடகோபன் தண்டமிழ் நூல் வாழ—கடல் சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாள மாமுனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ உ. வே. திருமழிசை கோயில் கந்தாடை

அண்ணவப்பங்கார் ஸ்வாமி வைபவம்

ஸ்ரீமத்2யதிவர லோகாசார்ய வரவரமுநிப்ரப்4ருதி பூர்வாசார்ய த3ர்ஶநத்துக்கு அத்யந்தோபகாரகராய், தா2ஶரதி2 (முதலியாண்டான்) வம்ஶஜராய், அண்ணவப்பங்கார் என்று ப்ரஸித்3த4மான திருநாமத்தையுடையராய், வாதூ4லவம்ஶஸ்த2ரான வீரராக4வாசார்ய ஸ்வாமி அவதரித்த தி3வ்யதே3ஶம் மஹீஸாரக்ஷேத்ரமான திருமழிசை. இவர் ஶாலிவாஹந ஶகாப்3த3ம் 1688 வதான (கி. பி. 1766) வ்யயநாம ஸம்வத்ஸரம் ஆனி மாதம் க்ருஷ்ண சதுர்த்தி2 வியாழக்கிழமை அவிட்ட நக்ஷத்திரத்தில் அவதரித்தார். இவர் திருத்தகப்பனார் திருநாமம் நரஸிம்ஹாசார்யர். இவருடைய குடி யதிவரபா4கி3நேய ஸ்ரீதா3ஶரதி2கு3ருத்தமாவதாராலங்க்ருதமான கோயில் கந்தாடை வம்ஶம். யஜுஶ்ஶாகை2. ஆபஸ்தம்ப3ஸூத்ரம். இவர் பதினைந்து வயதுக்குள் ஸ்வஶாகை2யான யஜுஶ்ஶாகை2யையும் ந்யாயமீமாம்ஸா வ்யாகரண ஸாங்க்2ய பாதஞ்ஜலாதி3 ஶாஸ்த்ரங்களையும், காவ்யநாடகாலங்காரக்3ரந்த2ங்களையும் ஜ்யோதிஶ்ஶாஸ்த்ர ஸங்கீ3த ப4ரதஶாஸ்த்ரங்களையும் அப்4யஸித்து அநுதி3நம் ஏத4மாந மேதை4யையுடையவராய், இருபது வயதுக்குள் ஸகலஶாஸ்த்ர வித்தமராய் — தமக்குப் பிதாவான நரஸிம்ஹாசார்யரிடத்தில் நின்றும் திருமந்த்ரார்த்த2ம் முதலிய ஸம்ப்ரதா3ய க்3ரந்த2 தாத்பர்யங்களை லபி4த்து க்3ரந்த2 நிர்மாண சதுரராய் எழுந்தருளியிருந்தார். இவருக்கு வேதா3ந்த வித்3யோபதே3ஷ்டாக்களான ஆசார்யர்கள் (வாதூ4ல) பழையாம் வரதா3சார்யர், ஸ்ரீ ரங்கா3சார்யர் என்றிவர்கள். இவர் ஸ்ரீரங்கா3தி3 தி3வ்யதே3ஶயாத்ரை எழுந்தருளி, ஆங்காங்கே குத்3ருஷ்டிகளை ஜயித்து, எம்பெருமானார் ஸித்3தா4ந்தத்தை வாழ்வித்துக்கொண்டு 51 திருநக்ஷத்ரம் இவ்விபூ4தியில் எழுந்தருளியிருந்து ஈஶ்வர வருஷம் ஐப்பசி மாஸம் ஶுக்லபக்ஷசதுர்த3ஶியில் திருநாட்டுக்கெழுந்தருளினார். இவர் அருளிச்செய்த க்3ரந்த2ங்கள்:—

1) ப4க்திஸாரோத3யம்
2) வேத3வல்லீஶதகம்
3) ஹேமலதாஷ்டகம்
4) அபீ4ஷ்டத3ண்ட3கம்
5) ஶுகஸந்தே3ஶம்
6) கமலா கல்யாண நாடகம்
7) மலயஜா பரிணயம்
8) ந்ருஸிம்ஹாஷ்டகம்
9) மஹாவீர சரிதவ்யாக்2யா
10) உத்தர ராம சரிதவ்யாக்2யா
11) ஶதஶ்லோகீ வ்யாக்2யா
12) ஸ்ரீவசநபூ4ஷண வ்யாக்2யாநத்துக்கு அரும்பத3 விளக்கம்
13) ராமாநுஜாஷ்டக வ்யாக்2யா
14) நக்ஷத்ரமாலிகா வ்யாக்2யா
15) தி3நசர்யா
16) து3ஷ்கர ஶ்லோக டிப்பணீ
17) ஷண்மத த3ர்ஶிநீ
18) ஸூக்தி ஸாது4த்வமாலா
19) வரவரமுநி ஶதக வ்யாக்2யா
20) லக்ஷ்மீ விபு4த்வநிராஸ:
21) லக்ஷ்ம்யா: உபாயத்வநிராஸ:
22) தத்வஸார வ்யாக்2யா
23) ஸச்சரித்ர பரித்ராணம்
24) த்ரிம்ஶத் ப்ரஶ்நோத்தரம்
25) பழநடை விளக்கம்
26) "ஶைலோக்3நிஶ்ச" ஶ்லோக வ்யாக்2யா
27) லக்ஷ்மீ மங்க3ளதீ3பிகா
28) ராமாநுஜாதிமாநுஷ வைப4வஸ்தோத்ரம்
29) அநுப்ரவேஶ ஶ்ருதி விவரணம்
30) ஸ்ரீதத்வஸுதா4 இத்யாதி3.

सकलमहीपरत्नकनकाञ्चितसन्मकुटी-
निकरविचित्रकान्तिपरिवीतनिजाङ्घ्रियुगः।
पुरवरभूमिसारसुचिरार्जितपुण्यफलं
वरगुणवीरराघवगुरुर्जयतात् सुचिरम्॥

ஸகலமஹீபரத்நகநகாஞ்சிதஸந்மகுடீ-
நிகரவிசித்ரகாந்திபரிவீதநிஜாங்க்4ரியுக3: |
புரவரபூ4மிஸாரஸுசிரார்ஜிதபுண்யப2லம்
வரகு3ணவீரராக4வகு3ருர்ஜயதாத் ஸுசிரம் ||

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி3 ஸ்ரீபெரும்பூதூர்

எம்பார் ஜீயர் ஸ்வாமி வைபவம்

[ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி]

ஸ்ரீமந் மஹார்ய கருணாலப்3த4 விஜ்ஞாநஸம்பதே3 ।
ஸ்ரீசைல லக்ஷ்மணாசார்ய முநயே நித்யமங்க3ளம் ॥

ஸ்ரிய:பதியான ஸர்வேஸ்வரன் திருவுள்ளம் உகந்து அர்ச்சாவதார விக்3ரஹ விஸிஷ்டனாய் எழுந்தருளியிருக்கும் தி3வ்யதே3ஸங்களுள், நடுநாட்டுத்திருப்பதிகளுள் ஒன்றாயும் முதலாழ்வார்கள், "வையந்தகளி" "அன்பே தகளி" என்று சுடர்விளக்கேற்றிப் பாதிநாளிரவில் "திருக்கண்டேன்" என்று முகுந்தனைக்கண்டு தொழுத தி3வ்யதே3ஸமாயும் உள்ள திருக்கோவலூருக்குப் பூர்வபா4க3த்தில், நீர்வளம் நிலவளம் பொருந்திய "கப்பியாமூர்" என்ற க்3ராமத்தில் ஸ்ரீவத்ஸ குலதிலகரான ராக4வாசார்யஸ்வாமிக்கும் பதிவ்ரதா ஸிக2ாமணியான ஜாநகியாருக்கும் ஓர்திருக்குமாரர் கலியுகா3தி3 4935க்குமேல் (கி.பி. 1834) ஜய வருஷம் ஆவணி மாதம்ரோஹிணீ நக்ஷத்திரத்தில் அவதரித்தார். இவரே நம் எம்பார் ஸ்வாமி. இவருக்கு "க்ருஷ்ணன்" என்று நாம கரணம் செய்தார்கள். ஸ்ரீ ஜயந்தியில் அவதரித்த இவர்க்கு இந்தத் திருநாமம் பொருத்தமுடையது. ஜாதகர்ம நாம கரணம் அந்நப்ராஸநம் சௌளம் உபநயநம் என்ற ஸம்ஸ் காரங்களால் ஸம்ஸ்க்ருதராய், க்ரமப்படி வித்3யாப்4யாஸமும் பெற்று வளர்ந்தருளினார். கருவிலே திருவுடையராகையால் நாட்டுப்பிள்ளைகளைப்போலன்றிக்கே, எம்பெருமான் தி3வ்ய மங்க3ள விக்3ரஹங்களை வைத்து விளையாடிக்கொண்டிருந் தார். ஒருநாள் இவர் விஸ்மயப்படும்படி, திருவேங்கடமுடை யான் திருமேனியொன்றுமே ஸேவை ஸாதி4த்து, மற்றத் திருமேனிகளெல்லாம் மறைய, நிலைநின்ற திருவேங்கடத் தாயன் நாண்மலர்த்தாமரையடிகளைமனத்தாலும் வாயாலும் போற்றி மகிழ்ந்து வந்தார். பிறகு ஸ்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராணாதி3களையும் தர்க்க மீமாம்ஸா வ்யாகரணாதி3ஸகல

ஶாஸ்த்ரங்களையும் குறைவறவோதி, திருவேங்கடத்தெந்தையின் திருவருள் அமைந்து ப$_3$ாலார்க்க ப்ரகாஶராய் விளங்கி வந்தார். இவர் தந்தை இவர்க்குத் திருக்கல்யாணம் செய்வதாகக் கருதி ப$_3$ந்து$_4$க்களில் ஒருவருடைய கந்யகையை விசாரித்தார். அவ்வளவில் கிருஷ்ணமாசார்யர் (எம்பார் ஸ்வாமி) அல்பாஸ்தி$_2$ர போ$_4$க்$_3$யமான விஷயாந்தரங்களில் பரிபூர்ண வைராக்$_3$யமுடையவராய், விஹிதபோ$_3$க$_3$ம் ஸ்வரூப விருத்$_3$த$_4$ம், ஶிஷ்டக$_3$ர்ஹிதம், ப்ராப்தி ப்ரதி ப$_3$ந்த$_4$கம் என்று தெளிந்தவராய், தமக்காகப் பெண் தேடப்போகிற தந்தையைத் தடுத்தார். ஹேயபத$_3$ார்த்$_2$க ஸமுத$_3$ாயமாயிருக்கிற ஶரீரத்தைக்காட்டி ப்$_4$ரமிக்கப்பண்ணுகிற சதிரிள மடவார் கலவியை மதியேன்; அத$_2$வா போ$_4$க்$_3$யதா பு$_3$த்$_3$தி$_4$ குலைந்து த$_4$ர்மபு$_3$த்$_3$த்$_4$யா ப்ரவர்த்தித்தாலும் ஸ்வரூப நாஶகமாகையாலே எனக்கு விவாஹம் வேண்டாம் எனக் கூறினர். ராக$_4$வாசார்யரும் தன் குமாரரின் வாக்சாதுர்யத்தையும் வைராக்$_3$யத்தையும் கேட்டானந்தி$_3$த்து இவர் அவதார புருஷர் என அறுதியிட்டார். கிருஷ்ணமாசார்யரும் ப்ராக்ருத ப$_3$ந்து$_4$க்களைத் துரந்து நித்ய ப$_3$ந்து$_4$க்களுடன் கலந்து வாழும் ப்ராப்திக்கு, இராமாநுசன் புகழ் மெய்யுணர்ந்தோர் திருவடிகளை ஆஶ்ரயிக்கத் திருவுள்ளமாயிருக்க, சோளஸிம்ஹபுரம், சண்டமாருதம் தொட்டாசார்யர் திருவம்ஶத்தில் அவதரித்தவரும், ஸ்ரீமத்$_3$ வாதூ$_4$லகுல திலகரும் ஆன ஸ்ரீ உ. வே. கோயில் கந்தாடை ஸ்ரீமாந். ரங்க$_3$ாசார்ய ஸ்வாமி தி$_3$வ்ய தே$_3$ஶ யாத்ரையாகக் கப்பியாமூருக்கெழுந்தருள, அவஸரப்ரதீக்ஷரான இவர் கண்டு திருவடிகளிலே தண்டம் ஸமர்ப்பித்து அடியேனை அங்கீகரிக்க வேணும் என ப்ரார்த்தி$_2$க்க. அபி$_4$மத விஷயத்தைக் கண்ட அவரும் "தாப: புண்ட்$_3$ர: தத$_2$ா நாம மந்த்ரோ யாக$_3$ஶ்ச பஞ்சம:" என்ற திருவிலச்சினை முதலான பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் ப்ரஸாதி$_4$த்து, திருவாராத$_4$நப்பெருமாளும் எழுந்தருளப்பண்ணிக்கொடுத்தருளினர். பா$_3$லப்பருவத்தில் ஸேவை ஸாதி$_4$த்தருளின திருவேங்கடத்துறை திருமாலே

இங்கும் ஸேவை ஸாதி4க்கக்கண்டு ஆநந்த3 பரவஶரானார். தி3வ்ய தே3ஶ யாத்ரையெழுந்தருளினார். பிறகு ஆசார்ய நியமநம் பெற்று ஆடூர் என்கிற க்3ராமத்துக்கெழுந்தருளி அங்கே, ஸப்3ரஹ்மசாரியான ஸ்ரீ உ. வே. ரங்க3ஸ்வாமி அய்யங்காருடன் சிலகாலம் எழுந்தருளியிருந்தார். அவருடன் திருநாங்கூர் எழுந்தருளினார். அங்கே, ஸ்ரீ உ. வே. ப்ரதிவாதி3 ப4யங்கரம் ஸ்ரீரங்க3ாசார்யஸ்வாமி திருமாளிகையில் எழுந்தருளியிருந்தார். அவரும் இவருடனே ஶாஸ்த்ர ப்ரஸங்க3ம் செய்து, இவர் வாக்யார்த்த2 சாதுர்யத்தையும் தேஜோவிஶேஷத்தையும் கண்டு ஆநந்தி3த்து, திருநாங்கூரிலே சிலகாலம் இவரை எழுந்தருளியிருக்கச் செய்தார். இவரை அங்கேயிருத்தி ஸ்ரீ உ. வே. ஆடூர் ரங்க3ஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி ஆழூருக்கெழுந்தருளினார். அன்றிரவு க்ருஷ்ணமாசார்யர் ஸ்வப்நத்தில், அங்கையில் பொற்பிரம்பேந்திய ஸேனையர்கோன் புயநான்குடனே ஸேவைஸாதி4த்தருளி, பின்னும் ஆசார்யனாகவும் ஸேவை ஸாதி4த்தருளி, 'நம்மூரேற வாரும்' என்றருளிச்செய்தார். கண்விழித்த க்ருஷ்ணமாசார்யர் ஆசார்யரை ஸேவிக்க த்வரித்து, சோளஸிம்ஹபுரத்துக்குப் பயணமாயினர். நடுவழியில் ஆடூருக்கு எழுந்தருளினார். அப்போது அர்த்த4ராத்ரியானபடியால், எவரையும் எழுப்பாமல், தம் மாதுலக்3ருஹத்தின் சுவரில் "அடியேன் க்ருஷ்ணதாஸன் வடக்கே விடைகொள்கிறேன்" என்று திருவெழுத்திட்டு, அந்தக்ஷணமே புறப்பட்டு, இராப்பகலின்றியே வழியில் தழைகளை உருவி தே3ஹத4ாரணம் பண்ணிக்கொண்டு, ஸ்ரீபெரும்பூதூரேற எழுந்தருளினார். அங்கே திருவநந்த ஸரஸ்ஸு என்கிற ஸ்ரீராமாநுஜ புஷ்கரிணியிலே தீர்த்த2மாடித் திருப்பரியட்டமும் சாற்றியருளி, த்3வாத3ஶோர்த்4வ புண்ட்3ரஸமேதராய் ப்ரத3க்ஷிணமாக ஸேவாக்ரமத்திலே உடையவரை மங்க3ளாஶாஸநம் செய்து, உடையவருடைய திருமேனி ஸௌந்த3ர்ய ஸௌக3ந்த்4ய ஸௌகுமார்யாதி3களிலீடுபட்டு, "கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிலும், உன்றன் மெய்யில்

பிறங்கிய சீர் அன்றி வேண்டிலன் யான்'' என்றநுஸந்தி4த்து ஸ்வாமிஸந்நிதி4க்கெதிரேயுள்ள ஸ்வர்ண மண்டபத்திற்குப் பின்புறத்தில் ஏகாந்தமாயிருந்துகொண்டு. உண்ணும் சோற்றின்படியே. உடையவரை ஐந்து நாட்கள் அஹோராத்ரவிப4ாக3மற, ஸந்நிதி4 பரிவாரங்கள் கண்ணிற் படாமல் அநுப4வித்து வந்தார். ஆறாவது நாள் ராக4வ ப4ட்டர் என்ற அர்ச்சகர் இவரைக்கண்டு, இவர் நித்யஸூரி களிலேயொருவர் என்றறுதியிட்டு, இவரையழைத்துப் போய். உடையவரை ஏகாந்தமாக ஸேவை செய்யும்படி செய்துவைத்து. தீர்த்த2ப்ரஸாத3ாதி3களையும் முதலியாண் டானையும் ப்ரஸாதி4த்தார். அன்று ஆளவந்தார் உத்ஸவச் சாற்றுமறை. ஆளவந்தாரையும் உடையவரையும் ஏகத்ர ஸேவித்து. ''விப4வாவதாரத்தில் இப்படிக் கலந்து இருக்கப் பெறாத இழவு தீரவோ? அடியேனை அடியார்க்காட் படுத்தவோ?'' என்று உருகும் சிந்தையராய் ஸேவித்துக் கொண்டிருந்தார். உடையவர் திருவடியில் தேங்கின்ற தீர்த்த2ம் பெற்று க்ருதார்த்த2ரானார். அங்கு நின்றும் விடை பெற்று. சோளஸிம்ஹபுரத்துக்கெழுந்தருளி ஸ்வாசார்யனை ஸேவித்து. அவராஜ்ஞையினால் அங்குள்ளார்க்குத் தத்வஹித புருஷார்த்த2ங்களை உபதே3ஶித்துக்கொண்டெழுந்தருளி யிருந்தார். ஒருநாள் அவ்வூரில் உள்ள ஓர் ஸ்ரீவைஷ்ணவர் இவருடையதிருமேனியழகையும் ஶாஸ்த்ர பாண்டி3த்யத்தை யும் வாக்3வைப4வத்தையும் கண்டு விஸ்மயித்துத் தன் பெண்ணை இவர்க்கு விவாஹம் செய்துவைக்க ஆசைப்பட் டார். இவரும் பல ஸமாதா4நங்களைச்சொல்லி விவாஹத்தை மறுத்தார். அன்றிரா உடையவர் இவர் ஸ்வப்நத்திலே எழுந்தருளி ஸேவை ஸாதி4த்தார். பின்னொருநாள் ஸ்வப்நத் தில் திருவநந்தாழ்வாள் திருமுடியின் கீழ் வீற்றிருந்த திருக் கோலத்தோடு மணவாளமாமுனிகள் இவர்க்கு ஸேவை ஸாதி4த்தார். இவருடைய வைராக்3யம் பன்மடங்கு வ்ருத்3தி4 யடைந்தது. பிறகு ஸ்வாசார்ய நியமநம் பெற்று கு3ரு

புஷ்யோத்ஸவம் ஸேவிக்க ஸ்ரீபெரும்பூதூர் எழுந்தருளினார். அங்கே உடையவரை ஸேவித்து "ஹே கோ$_3$தா$_3$க்$_3$ரஜ, ஹே க்ருபாஜலநிதே$_4$. ஹே ஸ்ரீநிதி$_4$ ஸ்ரீகு$_3$ரோ. ஹே யோகீ$_3$ஸ்வர. ஹே குரங்க$_3$நக$_3$ரீபூர்ணாஸ்ரிதாங்க்$_4$ரித்$_3$வய| ஹே ராமாநுஜ, ஹே ஜகத்த்ரயகு$_3$ரோ. ஹே புண்ட$_3$ரீகாக்ஷ மாம். ஹே ராமப்ரியதாத. பாலய. பரம் ஜாநாமி நத்வாம் விநா ||" என்றநுஸந்தி$_4$த்து எழுந்தருளியிருந்தார். ஒருநாள் பிள்ளை மண்டபத்திலே இவர் ஏகாந்தமாக மந்த்ரரத்நாநுஸந்த$_4$ானம் பண்ணிக்கொண்டெழுந்தருளியிருக்க. ஆங்கு பலநாட்களாக இருந்த ஓர் ப்$_3$ரஹ்மரக்ஷஸ்ஸு வெளியேவந்து இவரை ஆஸ்ரயித்து இவர் கடாக்ஷத்தால் இவர் ஆசார்யன் கடாக்ஷமும் பெற்று மோக்ஷம் பெற்றது. பிறகு இவர் சோளஸிம்ஹபுரம் சென்று ஆசார்யனை ஸேவித்து அவரநுமதி பெற்று, திருவேங்கடத்துக்கெழுந்தருளி. திருவேங்கடத்தரியைத் திருவடிதொழுது அவ்வெம்பெருமானுடைய திருக்கல்யாண குணங்களிலே ஆழ்ந்திருந்தார். ஒருநாள் எம்பார் இவர் ஸ்வப்நத்திலே எழுந்தருளி, "வாரீர் க்ருஷ்ணமாசார்யரே! நமக்கு மிகவும் குளிராயிராநின்றது. தக்கதோர் சால்வை வாங்கிக்கொண்டு மது$_4$ரமங்கலத்தேற வாரும்" என்று நியமித்தார். இவரும் கண்விழித்து. பெரிய ஜீயருக்கு விண்ணப்பம் செய்தார். அவரும் தமக்கும் இதே ஸ்வப்நம் விளைந்த ஆஸ்சர்யத்தைச் சொல்லித் திருவேங்கடமுடையான் உடுத்துக்களைந்த பீதகவண்ணவாடை கொடுத்து மது$_4$ரமங்க$_3$லத்துக்கனுப்பினார். இவரும் எம்பார்க்கு இதனைச் சாற்றி க்ருதார்த்த$_2$ரானார். பின்பு ஒருநாள். ஓர் த்ரைவர்ணிகன் மகனைப் பிடித்திருந்த ப்$_3$ரஹ்மரக்ஷஸ்ஸை ஓட்டினார். அப்பிள்ளையின் பெற்றோர் மனமுவந்து இவர் நியமநாநுகு$_3$ணமாக எம்பார் ஸந்நிதி$_4$ மண்டப ப்ராகாரங்களையும் மதிளையும் கட்டிவைத்து க்ருதார்த்த$_2$ரானார்கள். இவர் எம்பார் ஸந்நிதி$_4$யில் எம்பார் திருமேனிக்குப் பாங்காகத் திருவாராத$_4$ந தீர்த்த$_2$த்தில் பரிமளத்$_3$ரவ்யங்களை விஸேஷமாகச் சேர்த்து நித்ய

ஆராத4னாதி3களை நடப்பித்தார். இதுபற்றி இவரை "பரிமளம் க்ருஷ்ணமாசார்யர்" என்பர். அவரவர் தம்மேற்றத்தால் நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை என்றுப்போல் இவர்க்கும் இத்திருநாமமாயிற்று. இந்தக் கைங்கர்யம் அவிச்சி2ந்நமாக நடைபெறவேணும் என்றும் அதற்காக ஓர் ஜீயர் எழுந்தருளியிருக்கவேணும் என்றும் பார்த்து, ஒருவரும் இசையாமையாலே தாமே ஸந்ந்யஸிப்பதாக எம்பார்க்கு விண்ணப்பித்து, திருவேங்கடத்துக்கெழுந்தருளி, அங்கே வகுளாப4ரண ஜீயரென்கிற பெரிய ஜீயரிடத்திலே விஷயத்தை விண்ணப்பித்தார். திருவேங்கடமுடையானும் பெரிய ஜீயருடைய ஸ்வப்நத்தில் "க்ருஷ்ணமாசார்யருக்குத் துரீயாஶ்ரமம் தரக்கடவீர்" என்று நியமித்தருளினார். பெரிய ஜீயரும் இவர் த்வரையையும் பெருமாள் நியமநத்தையும் கண்டு ஆஶ்சர்ய ஆநந்த3ப4ரிதராய், த்ரித3ண்ட3 காஷாயாதி3களைக்கொடுத்து, பா3ல்யமே பிடித்துத் திருவேங்கடமுடையான் திருவருள் இவர்க்கு அமைந்திருக்கையால், இவர்க்குத்திருவேங்கட ராமாநுஜ ஜீயர் என்கிற திருநாமமும் சாத்தி, தீர்த்த2 ப்ரஸாத3ங்களும் ப்ரஸாதி3த்தருளினார். பிறகு இவர் மது4ரமங்க3லத்தேற வெழுந்தருளினார்.

இவருடைய பூர்வாஶ்ரமத் திருத்தம்பியார் ஸ்ரீ உ. வே. ஸ்ரீரங்கா3சார்யஸ்வாமி முக2மாக இவருடைய ஸகல வ்ருத்தாந்தங்களையும் உத்தம ஆஶ்ரமஸ்வீகாரத்தையும் கேட்ட ராக4வாசார்யஸ்வாமி, தம்முடைய திருக்குமாரனின் வைராக்3யத்தையும் உத்தமாஶ்ரமஸ்வீகாரத்தையும் நினைந்து நைந்து உள்கரைந்து, இவரை ஸேவிக்கத் திருவுள்ளமாய், மது4ரமங்க3லம் வந்து, ஜீயரை ஸேவித்து க்ருதார்த்த2ரானார். பின்பு ஜீயர் திருவுள்ளப்படி, திருக்கோவலூரில் உடையவருக்கு மாஸத் திருநக்ஷத்ரங்களைக் குறைவற நடத்திவந்தார். அத்தால் இவர்க்குத் திருநக்ஷத்ரம் ராக4வாசார்யர் என்றே திருநாமம் விளங்காநின்றதிறே.

பின்பொருநாள் ராக4வாசார்யஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருள, திருக்குமாரர் ரங்க3ாசார்யர் சரம கைங்கர்யங்களை முடித்து மது4ரமங்க3லத்திலே ஜீயர் திருவடிகளுக்கு அந்தரங்க3ராய் வந்து சேர்ந்தார். எம்பாருக்கு அந்தரங்க3கிங்கரராய் எழுந்தருளியிருந்தமையால் திருவேங்கட ராமானுஜ ஜீயர் எம்பார் ஜீயர் என்றே ப்ரஸித்3த4ரானார். அநந்தரம் எம்பார் ஜீயர்ஸ்வாமி ஸ்ரீ பா4ஷ்ய ப4க3வத்3 விஷய ரஹஸ்யாதி3ஸந் ஸம்ப்ரத3ாயார்த்த3ங்களை ஞானமநுஷ்டானமிவை நன்றாகவே யுடையனை கு3ருமுக2மாகப் பெறவேணும் என்னும் ஆசையினால் திருநாராயணபுரம் எழுந்தருளி, திருநாரணனை மங்க2ளாசாஸநம் செய்து, பிறகு அங்கே வாதூ4லகுலதிலகராய் எழுந்தருளியுள்ள ஸ்ரீ உ. வே. கோயில் கந்தாடை தொட்டாசார்ய ஸ்வாமியிடம் ஸ்ரீ பா4ஷ்யாதி3களைக் காலக்ஷேபம் செய்தார். சாத்துமுறையான பிறகு தொட்டாச்சார்யர் நியமநம் பெற்றுத் திருவரங்கந்திருப்பதியேற எழுந்தருளினார். பெரியபெருமாளையும் பெரியபிராட்டியாரையும் திருவடி தொழுது மங்களாசாஸநம் செய்து அங்கே சில நாள் தங்கியிருந்து, பிறகு தி3வ்ய தே3ச யாத்ரையாக மது4ரமங்க3லம் எழுந்தருளினார். எம்பார் ஜீயர் ஸமீபத்தில் எப்போதும் ஸர்ப்ப ஸஞ்சாரம் கண்டு ஸமீபஸ்த2ர் பயப்பட்டார்கள். இவரும் அவர்கள் ப4யம் தீர ஏகாந்தமாக அவர்கள் அமைத்துக் கொடுத்த ஆச்ரமத்தில் காந்தூர் தோட்டத்தில் எழுந்தருளியிருந்தார். பின்பு எம்பார்ஸ்வாமி ஒரு ஸமயம் திருக்குருகூர் எழுந்தருளி ஆழ்வாரை ஸேவித்துக் கொண்டிருக்க, திருவரங்கத்தில் பெரியபெருமாளை ஸேவித்திருக்கத் திருவுள்ளமாய் அன்றிரவு இவர் ஸ்வப்நத்தில் திருநாராயணபுரம் தொட்டாசார்யர் ஸேவை ஸாதி4த்து, ஜீயரே ஆழ்வாரை நன்றாக ஸேவித்தீரா! இனி நம் வார்த்தையைக் கேட்பீராக.

மஸ்தகம் ஸ்ரீசடா2ராதிம் நாத2ாக்2யம் முக2மண்ட3லம் |
நேத்ரயுக்3மம் ஸரோஜாக்ஷம் கபோலௌ ராக4வம் தத2ா ||

வக்ஷஸ் ஸ்தலம் யாமுநாக்₂யம் கண்ட₂ம் ஸ்ரீபூர்ண
தே₃ஶிகம் ।
பா₃ஹுத்₃வயம் கோ₃ஷ்டி₂ பூர்ணம் ஶைலபூர்ணம்
ஸ்தநத்₂வயம் ॥
குக்ஷிம் து வர ரங்க₃ார்யம் ப்ருஷ்ட₂ம் மாலாத₄ரம் தத₂ா ।
கடிம் காஞ்சீமுநிம் ஜ்₃ஞேயம் கோ₃விந்த₃ார்யம்
நிதம்ப₃கம் ॥
ப₄ட்டவேத₃ாந்திநௌ ஜங்கே₄ ஊருயுக்₂மம் மத₃ாத்மஜம் ।
க்ருஷ்ணம் ஜாநுயுக₂ம் சைவ லோகம் ஸ்ரீபாத₃பங்கஜம் ॥
ரேக₂ாம் ஸ்ரீஶைல நாத₂ாக்₂யாம் பாது₃காம்
வரயோகி₃நம் ।
புண்ட்₃ரம் ஸேநாபதிம் ப்ரோக்தம் ஸூத்ரம் கூரபதிம்
தத₂ா ॥
பா₄கி₃நேயம் த்ரித₃ண்ட₃ஞ்ச காஷாயஞ்சாந்த்₄ர
பூர்ணகம் ।
மாலாஞ்ச குருகேஶார்யம் ச₂ாயாம் ஸ்ரீசாப ஸிங்கரம் ॥
ஏவம் ராமாநுஜார்யஸ்யாவயவாநகி₂லாந் கு₃ரூந் ।
அவயவிநம் மஹாத்மாநம் ராமாநுஜமுநிம் ப₄ஜே ॥

இப்படி ஸர்வாசார்யர்களும் அவயவங்களாய் தான் அவயவியாய், மாறனடிபணிந்துய்ந்தவராய், பொன்னரங்க மென்னில் மயலேபெருகுமவராய், உப₄ய விபூ₄தி ஸாம்ராஜ்ய பட்டாபி₄ஷேக லக்ஷ்மீஸம்பந்நராய் எழுந்தருளியிருக்குமவரான ஸ்ரீபெரும்பூதூர் நம்மிராமாநுசன் திருவடித் தாமரைகளையே தஞ்சமாகப்பற்றி ஸ்ரீபெரும்பூதூரில் நித்ய வாஸமாக இரும்'' என்று அருளிச் செய்தார். எம்பார் ஸ்வாமியும் கண் விழித்து, பெரியபெருமாள் நியமநம் பெற்று ஸ்ரீபெரும்பூதூரேறவெழுந்தருளினார். உடையவரைப் பரிபூர்ணமாக அநுப₄வித்து, "திருவரங்கர் கைத் தலத்தாழியும் சங்கமுமேந்தி நங்கண் முகப்பே மொய்த் தலைத்து உன்னைவிடேன் என்றிருக்கிலும், உன்றன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்"என்று அநுஸந்தி₄த்து, சீரியதோர் நிதி₄போலே திருமுன்பே நோக்கிவைத்

திட்டிருக்கிற முதலியாண்டான் பெற்று, ஸ்ரீ பெரும் பூதூரிலே நித்யவாஸமாக எழுந்தருளியிருந்தார். பிறகு ஸ்ரீமந்நாத2முநிகள் திருவவதாரஸ்த2லமான வீரநாராயண புரத்தினின்றும், நாத2முநி சேஷாத்3ரி அய்யங்கார் என்று ப்ரஸித்3த4ரான ஜ்ஞாநப4க்தி வைராக்3ய நிதி4யான, ஸ்ரீவசந பூ4ஷணதி3 அநுஷ்டா2நபூர்ணரான ஸத்ஸம்ப்ரதா3யார்த்த2 நிதி4யான ஓர் ஸ்ரீவைஷ்ணவர் ஸ்ரீபெரும்பூதூருக்கெழுந் தருளி, எம்பார் ஸ்வாமி ஸ்வரூப ரூபகுணங்களிலும் ஈடு பட்டு, ஸ்ரீமந்நாத2முநிகளையும் மறந்து ஜீயர் ஸ்வாமி யுடன் இருந்து, அவருக்கு உடையவர் ஸந்நிதி4க்குத் தெற்கே ஓர் மட2த்தையும் கட்டிக்கொடுத்தார். ஒருநாள் ஸ்ரீபா4ஷ்ய ப4க3வத்3 விஷய காலக்ஷேபத்துக்கு ஸ்வாமிகள் காத்திருக்க, ஜீயர் ஸ்வாமி ஓர் மண்டபத்தின் மண்ணையிருந்து துழாவி 'வாமநன் மண்' இது என்று கூறி மண்ணையெடுத்துச் சிரமேற் கொண்டார். முதலிகள் என்னென்று வினவ, ஆதி3கேஶவப் பெருமாள் குதிரைநம்பிரான்மீது ஆரோஹித்து மண்ட பத்தைச் சுற்றி எழுந்தருளிக் கோயிலுக்குள் ப்ரவேஶித்தார். அந்த அடிச்சுவட்டைக் காண ஆசைப்பட்டுத் தேடி, கண்டு களித்தேன் என்றார். அருகிருந்தவர்கள், "ஈறிலின்பத் திருவெள்ளம் யான் மூழ்கினன்" என்ற ஆழ்வார் போலே இவரும் 'கண்டு களித்தேன்' என்கிறார். இதென்ன, திருமா மகள் கோன் தன் சேவடிகளோ? நம்பெருமாள் சொலத் தனியன் பெற்ற பெருமாளோ?" என்று கூறி வியந்தனர். இப்படி மஹாவைப4வத்தோடு எழுந்தருளியிருக்கிற எம்பார் ஜீயர் ஸ்வாமிக்கு, திருநாரயணபுரம் தொட்டாசார்ய ஸ்வாமி "ஸ்ரீவாதூ4ல ரமாப்ரவாள" என்ற தனியனை அருளிச் செய்து கொடுத்தருளினார். ஜீயரும், எம்பாரைப்போலே தம்முடைய வைப4வம் ஆசார்ய ஸம்ப3ந்தா4தீ4நம். இது நமக்கெல்லார்க்கும் நித்யாநுஸந்தே4யம் என்று ஆநந்த3 ப4ரிதரானார். பின்பு எம்பார்ஸ்வாமி இந்த ஸ்ரீபெரும்பூதூர் தி3வ்ய தே3ஶத்தில் நம்பிள்ளை லோகாசார்யர்களை எழுந்

தருளுவித்து உத்ஸவம் கண்டருளப்பண்ண வேணும் எனப் பாரித்தார். அதன்படி செய்தருளினுர். உத்ஸவ காலங்களில் உடையவரை "க₃ஜஸிம்ஹ க₃தீ வீரௌ" என்கிறபடியே நடையழகுடன் எழுந்தருளப்பண்ணுவது. திருமஞ்சனக் காலங்களில் கட்டியம் ஸேவிப்பது. உத்ஸவத்தில் சதுஸ் ஸ்தம்ப₄மண்டபத்தில் ஸ்ரீவைஷ்ணவர்கள் த்₃வயோபநிஷத்து ஸேவிக்க உடையவர் மண்ணிலரங்கமுதல் வைகுந்த நாடளவாக உப₄ய பார்ஶ்வத்திலும் மங்க₃ளாஶாஸநம் செய்வது, திருவீதியில் எழுந்தருளும் போதெல்லாம் திருவவதார ஸந்நிதி₄யில் உள்ள 74 ஸிம்ஹாஸநாதி₄பதிகளுக்கு முதலியாண்டான் ஸாதி₄ப்பது, ஆறும் உத்ஸவத்தில் உடையவர் வெள்ளைசாத்திக்கொள்வது. ஆழ்வான் த்ரிதண்ட காஷாயாதி₃களை த₄ரிப்பது, எட்டாம் உத்ஸவத்தில் திருவநந்தாழ்வான் மேலிருந்து திருமந்த்ரார்த்த₂த்தை ப்₄ரித₃ாநம் செய்வது,ஏகாந்த ஸேவையில் கட்டியங்கள், எச்சரிக்கைகள், கூட எழுந்தருளும் வைப₄வம் இவை முதலான வைப₄வங்கள் எமபார்ஸ்வாமி கைங்கர்யங்கள் ஆகும். உடையவர் திருவரங்கர் செல்வத்தைத் திருத்தினுப்போலே. எம்பார் ஜீயர் ஸ்வாமி உடையவருடைய செல்வத்தைச் சீர்திருத்தி "ஸ்ரீராமாநுஜமுக்₂ய தே₃ஶிக லஸத் கைங்கர்ய ஸம்ஸ்த₂ாபக" ராய் எழுந்தருளியிருந்தார். எம்பார் ஜீயர் ஸ்வாமி ஸ்வபக்ஷ ஸ்த₂ாபந பரபக்ஷப்ரதிக்ஷேபங்களைச் செய்துகொண்டெழுந்தருளியிருந்தார் :

முக்கிய நிகழ்ச்சிகள்

1) திருமண் காப்பு விஷயமாய் ஸித்₃த₄ாந்தம்.
2) பெருமாள் நெற்றியில் திருமண் காட்பு விசாரம்.
3) "சேத்தத்தின் வயிற்றில் சிறு குட்டி" வாக்யார்த்த₂ விசாரம்.
4) "அன்றுசராசரங்களை வைகுந்தத் தேற்றியது" பற்றிய விசாரம்.
5) பெருமாள் இங்கவதரித்த காலத்தில் பரமபத₃த்தில் பெருமாள் இல்லையா என்ற விசாரம்.
6) உடையவர் திருமஞ்சனக் கட்டியம் அருளியது.

7) ஸ்ரீவசநபூ4ஷண ஸ்ரீப4ாஷ்யங்களுக்கு ஐககண்ட்2யம்.
8) புராணமார்க்க3 தீ3பிகை அருளிச்செய்தது.
9) நாராயணபரத்வம் திருச்சித்திரகூடத்திலே (சிதம்பரத்திலே) ப்ரத்யக்ஷிஸித்3த4ம் என்றது.
10) க3ர்ப்ப4 ஸமாஶ்ரயண விசாரம்.
11) பிள்ளைகள் விளையாட்டுப் பெருமாளை ஜீயர் தண்டனிட்டது.
12) ஆசார்யாபி4மாநமே தஞ்சம் என்பது பற்றிய விசாரம்.
13) சென்னையில் (பைராகிமடம்) ஸ்ரீநிவாஸன் ஸந்நிதி4யில் தங்கியது.
14) ஸ்ரீபெரும்பூதூர் வஸந்தோத்ஸவ மண்டப கைங்கர்யம்.
15) சென்னையில் "ஸத்யஸமாஜம்" என்ற ஸபையை ஸ்தாபித்தது.
16) ஸ்ரீபெரும்பூதூரில் "கே3ாத3ாவிலாஸம்' என்ற நந்தவநம் அமைத்தல்.
17) ஸ்ரீபெரும்பூதூரில் வநபோ4ஜந உத்ஸவம் நடத்தி வைத்தது.
18) கலியுக3ாதி3 4984 ஆன (கி. பி. 1893) சித்ரப4ாநு வரு தை மாதம் க்ருஷ்ண சதுர்த3ஶி (த்ரயோதஶீ?) திதி2 யில் திருநாட்டுக்கு எழுந்தருளினுர்.

கப்யாமூர்க்3ராமவர்யேऽவதரண விப4வ:
ப3ாலப4ாவோ விரக்தி:
ப்ரவ்ராஜஶ்ஶாஸ்த்ரசிந்தா
யது3கி3ரிக4டிகாஶைலகு3ர்விந்த்3ர ஸேவா ।
யோகஃ3ாப்4யாஸோ விஶேஷாத்
வரவரயமிந: ஸாத3ராபாங்க3வீக்ஷா,
ப்ரஜ்ஞாவல்லீ விலாஸோ
க4நயதிருபதௌ ஆஶ்ரமோத்தம்ஸலாப4: ॥
ராக3: ஸ்ரீபூ4தபுர்யாம்...
லோகாசார்ய ப்ரதிஷ்ட2ா ப்ரகடந விப4வ:
ஸத் க்ருதீநாம் க்ருதிஶ்சேத்-
யேவம் ஸ்ரீஶைலராமாநுஜ கு3ருயமிநாம்
வைப4வோ ஜ்ஞாப்யதேऽத்ர ॥

எம்பார் ஜீயர் ஸ்வாமி வைப4வம் ஸமாப்தம்.

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி3

ஸ்ரீபெரும்பூதூர் எம்பார் ஜீயர் ஸ்வாமி

பரம்பரைக்கு அஸாத4ாரணங்களான தனியன்கள்

கோயில் அண்ணன்

१. सकलवेदान्तसारार्थपूर्णाशयं
विपुलवाधूलगोत्रोद्भवानां वरम् ।
रुचिरजामातृयोगीन्द्रपादाश्रयं
वरदनारायणं मद्गुरुं संश्रये ॥

திருவாழியாழ்வான்

२. मनोज्ञवरयोगीन्द्रकिंकरं गुणसागरम् ।
वरदार्यप्रियं वन्दे सुदर्शनगुरूत्तमम् ॥

வானமாமலை ஜீயர்

३ रम्यजामातृयोगीन्द्रपादरेखामयं सदा ।
तदायत्तात्मसत्तादिं रामानुजमुनिं भजे ॥

ஶுத்3த4ஸத்வமண்ணன்

४. वाधूलवरदाचार्यवरिवस्याविशारदम् ।
